Registered as a news paper.
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

உங்களுக்குத் தேவையான நவீன விதமான சன் கிளாஸ், டே அன் நயிட் கிளாஸ், பிளாஸ்டிக் லென்ஸ் போன்ற சகலவிதமான கண்ணாடிகள் 1 மணித்தியாலத்தில் குறைந்த விலையில் செய்துதரப்படும். இலவச கண் பரிசோதனை. பாடசாலை மாணவர்களுக்கு விசேட கழிவு உண்டு.

ஒளிச்சுடர் மூக்குக் கண்ணாடியகம்

44A, நவீன சந்தை,
யாழ்ப்பாணம். (சி-1239)

மலர் : 01 திருவளளுவர் ஆண்டு: 2034 ஆடி 25 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஜ.ஆகிர் 11 (10.08.2003) ஞாயிற்றுக்கிழமை இதழ்: 311

### க.பொ.த. உயர்தரப் பரீட்சையில்

## தேசிய ரீதியில் 180 மாணவர் 3 பாடங்களிலும் 'A' சித்தி!

கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சைகளின் பெறுபேறுகளின் படி, தேசிய ரீதியில் 180 மாணவர்கள் மூன்றுபாடங்களிலும் விசேட சித்தி அடைந்துள்ளதாக பரீட்சை ஆணையாளர் தெரிவித்தார்.

நேற்று வெளியிடப்பட்ட பெறுபேறுகளின் படி, பல்கலைக்கழகத்துக்கான அனுமதியைப் பெற தகைமை பெற்ற 93,286 மாணவர்களில் 9 ஆயிரத்து 174 பேர் மருத்துவபீடத்திற்கும், 7194 பேர் பொறியியல் பீடத்திற்கும், 28 ஆயிரத்து 656 பேர் முகாமைத்துவ பீடத்திற்கும் 48,260 பேர் கலைப்பீடத்திற்கும் விண்ணப்பிக்க தகைமை பெற்றுள்ளனர்.

இதேவேளை - தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான பெறுபேறுகள் விண்ணப்பங்களிற் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும் எனப் பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

### பிரதமர் ரணில் சீனாவுக்கு விஜயம்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சீனாவிற்கான தனது விஜயத்தை நேற்று ஆரம்பித்தார்.

"சியமென்" என்ற இடத்தில் அமைந்துள்ள பாரிய மின்னியல் சாதனங்களை உற்பத்தி செய்யும் நிறுவனத்தைப் பார்வையிடும் பிரதமர்,

தியமென் நகரத்தின் நகர பிதாவைச் சந்திக்கவும், இலங்கையில் மூலதனமிடவுள்ள சீன முதலீட்டாளர்களுக்கான மாநாட்டையும் பீஜிங்கில் நடத்துவதற்கும் ஏற்பாடாகியுள்ளது.

இறப்பர், பிளாஸ்டிக், சிறிய மின்னியல் கருவிகளை உற்பத்தி செய்வதற்கான சிறிய, நடுத்தர முதலீட்டாளர்களுக்கு பிரதமர் முன்னுரிமை கொடுக்கவுள்ளார்.

### நேற்று வெளியான பெறுபேறுகளில்

## யாழ். இந்துக்கல்லூரி மாணவர் கணிதப் பிரிவில் முன்னணியில்!

நேற்று வெளியான க.பொ.த உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் படி - யாழ். இந்துக்கல்லூரி மாணவர்கள் இருவர் தேசிய மட்டத்தில் 6 ஆம் 8 ஆம் இடங்களைப் பெற்றுள்ளனர்.

கணிதப்பிரிவில் - செல்லையா அருண்கரன் 6 ஆம் இடத்தையும், விக்கிரமஇராஜசிங்கன் சசிச்சந்திரன் 8 ஆம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

யாழ்.மத்திய கல்லூரியில் வர்த்தகப் பிரிவில் - பிரதீபன், தர்மித் ஆகிய இருவரும் 2ஏ, பி.

அருள்குகன், ஜெசிந்தன், பிரதீபன் ஆகிய மூவரும் ஏ, 2பி, மதனரூபன் ஏ,பி,சி, மனோதீபன் ஏ,2சி.

குணபாலன், சதீஸ், மயூரன் ஆகியோர் 3பி.

அத்துடன் 2பி, சி - 2பேரும், 2பி, எஸ் ஒருவரும், பி, 2சி 6 பேரும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# மூன்று நாள் விஜயமாக சொல்ஹெய்ம் நாளை மறுதினம் கொழும்பு வருகிறார்!

### இடைக்கால நிர்வாகம், குரங்குப்பாஞ்சான் விவகாரம்; அரச - புலிகள் தரப்புகளுடன் பேச்சுக்கள் நடத்துவார்



(கொழும்பு)

**நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு நாளைமறுநாள் கொழும்பு வரவுள்ளார்.**

**மூன்று தினங்கள் இங்கு தங்கியிருக்கும் சொல்ஹெய்ம், அரசதரப்பினரையும், வன்னியில் விடுதலைப் புலிகளையும் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.**

நாளை மறுதினம் கொழும்பு வரும் எரிக் சொல்ஹெய்ம், விடுதலைப் புலிகளிடம் அரசு சமர்ப்பித்திருக்கும் இடைக்கால நிர்வாகம் தொடர்பான திட்டவரைபு குறித்து, விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

அத்துடன் - அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சை மீளவும் ஆரம்பிப்பதற்காக, விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார் என, நோர்வேத் தூதரகம் அறிவித்துள்ளது.

தற்போது - சர்ச்சையை ஏற்படுத்திவரும் (10 ஆம் பக்கம் பார்க்க)

### குரங்குப்பாஞ்சான் முகாம் தொடர்பான

## அமெரிக்காவின் நிலைப்பாட்டுக்கு புலிகள் தரப்பு கவலை தெரிவிப்பு!

திருமலை - குரங்குப்பாஞ்சான் பகுதியிலுள்ள புலிகளின் முகாம் தொடர்பாக, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு வெளியிட்ட அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு அமெரிக்கா வெளியிட்டுள்ள அதிருப்தி குறித்து விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன.

குரங்குப்பாஞ்சான் பிரதேசம், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே அமைந்துள்ளது, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் விடுதலைப் புலிகள் சமர்ப்பித்த கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் தொடர்பான வரைபடத்தில், குரங்குப்பாஞ்சான் உள்ளடக்கப்பட்டுள்ளது. வீரச்சாவடைந்த விடுதலைப் புலி உறுப்பினர்களின் வித்துடல்கள் அப்பகுதியில் புதைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கும் விடுதலைப் புலிகளின் தரப்பு, போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு - ஒரு தலைப்பட்சமாக மேற்கொண்ட முடிவினை ஆதாரமாகக் கொண்டு அமெரிக்காவும் விடுதலைப் புலிகள் மீது குற்றம் சுமத்தி அறிக்கை வெளியிட்டுள்ளது. இதுகுறித்து விடுதலைப புலிகள் தரப்பு கவலை கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## அமைச்சர் ஜோன் அமரதுங்க இன்று யாழ்ப்பாணம் வருகை!

உள்நாட்டு பாதுகாப்பு, கிறிஸ்தவ விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க இன்று காலை யாழ்ப்பாணம் வருகிறார்.

காலை 8.30 மணிக்கு பலாலி வரும் அமைச்சர், இந்து கலாசார அமைச்சர் மகேஸ்வரனை, 9 மணியளவில் அவரது இல்லத்தில் சந்திப்பார். தொடர்ந்து யாழ்.ஆயரைச் சந்திக்கவுள்ளார்.

சென். ஜேம்ஸ் கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரி, யாழ். பொது நூல் நிலையம், துரையப்பா விளையாட்டரங்கு ஆகிய இடங்களுக்கும் அமைச்சர் விஜயம் செய்வார்.

பொலிஸ் நிலையத்துக்குச் சென்று, அங்குள்ள நிலைமைகளைப் பார்வையிட்ட பின்னர், யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கும் விஜயம் செய்வார்.

தொடர்ந்து - நல்லூர் ஆலய சூழலிற்குச் செல்லும் அமைச்சர் ஜோன் அமரதுங்க, நல்லை ஆதீனத்திற்கும் செல்வார். பின்னர் - முஸ்லிம்கள் வசிக்கும் பிரதேசங்களைச் சென்று பார்வையிடும் அமைச்சர், நாகவிகாரைக்கும் செல்லவுள்ளார்.

இதேவேளை, அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கு யாழ்ப்பாணத்தில் வரவேற்பளிப்பதற்கு, எதிர்ப்புத் தெரிவித்து, ஈழத்தமிழின மன்றத்தின் சார்பில் துண்டுப்பிரசுரம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

### விண்ணாணம் விநாசியர்



சொல்ஹெய்ம் வந்து பிரச்சினைகளைத் தீர்ப்பாரே....?

## அரியாலை பாதுகாப்பு வலயத்தில் விவசாயத்துக்கு படையினர் அனுமதி!

(அரியாலை)

அரியாலைப் பகுதியில் இராணுவத்தினரின் பாதுகாப்பு வலய விவசாய நிலங்களில் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு இராணுவத்தினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

நல்லூர் பிரதேச செயலக பிரிவிலுள்ள விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக, நேற்றுக் காலை நடைபெற்ற கூட்டத்தில், இராணுவ அதிகாரி மேற்படி அறிவித்தலை விடுத்தார்.

அரியாலை, ஈச்சங்காடு, கொட்டுக்கிணற்றடி மற்றும் அதனை அண்டிய பகுதிகளே விவசாயம் செய்வதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில், பெருமளவு விவசாய நிலங்கள் இராணுவ முகாமுக்குள் முடக்கப்பட்டதால் விவசாயிகள் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கினர்.

இதேவேளை - இந்த முகாமை அண்டியுள்ள விவசாய நிலங்களிலும் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு அனுமதியளிக்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (55)

## துணைப் படையைச் சேர்ந்தவர் அக்கரைப்பற்றில் சுட்டுக்கொலை!

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்ட அக்கரைப்பற்றில், தமிழ்க்குழு முன்னாள் உறுப்பினர் ஒருவர், நேற்றுமாலை இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர், அதேயிடத்தைச் சேர்ந்த சம்புநாதபிள்ளை விவேகானந்தராஜா என அடையாளம் காணப்பட்டுள்ளது

முன்னர் ரெலோ உறுப்பினராக இருந்து ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் வரதர் அணியில் சேர்ந்து கொண்ட இவர், சில காலம் ராசிக் குழு ஊடாக தேசிய துணைப்படையிலும் பணியாற்றியிருந்தார்.

நீண்டகாலமாகக் கொழும்பில்

(10 ஆம் பக்கம் பார்க்க)





EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ஞர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 01360290 01360291
email . jaffna @ expoavi . com.
(சி -1139)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் தோழன்...

இப்பொழுது
யாழ். மண்ணில்.....



GUDWIL

Rs. 230,000/-




விவசாயிகளின் தேவைகளைக் கருத்தில் கொண்டு நவீன தொழில் நுட்பத்துடன் வடிவமைக்கப்பட்ட - குறைந்த எரிபொருள் பாவனையும் - வேகமான ஆக்கத்திறனும் கொண்ட

2 வருட
உத்தரவாதம்
ஐந்து இலவச
சேவைகள்

## புத்தம் புதிய நான்கு சில்லு டிராக்ரர்கள்

- சுழல் கலப்பைகள்.
- மண் புரட்டுக் கலப்பைகள்
- இழுவை பெட்டி - 2½ தொன் எடை கொண்ட (8′x5′x15′)உயர்த்தி சாய்விக்கவல்லவை
- அரிசி ஆலைகள் - நெல்லைச் செலுத்தி (மணித்தியாலத்துக்குள் 500-600 Kg) உமி அகற்றி போலிச் செய்து குற்றிய அரிசியைப் பெறலாம். (ஒரே தடவையில்)
- உதிரிப் பாகங்கள் தாராளமாகவும் மலிவாகவும் கிடைக்கும்.
- மூன்று வண்ணங்களில் (செம்மஞ்சள், நீலம், சிவப்பு)
- பலதரப்பட்ட விவசாயக் கருவிகள் இணைக்கலாம்.



டிராக்ரர்களையும் விவசாய உதிரிப்பாகங்களையும் தாமதமின்றி பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்

பருத்தித்துறை வீதி,
இருபாலை சந்தி, கோப்பாய்,
யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 222 5784

(1333)

**AMT TRANSPORT SERVICES**



ஓவ் (f) செற் முறையில் அச்சுப் பதித்து இப்போது உங்கள் தேவையை, தங்கள் சேவையாக கருதி ~ தரமாக, நேர்த்தியாக என்றும் தெளிவாகப் பார்க்க, பாதுகாக்க அச்சுப் பதித்துத் தருகிறார்கள்

## சுரபி பதிப்பகத்தினர்

பத்திரிகைகள்
மலர்கள்
சஞ்சிகைகள்
பெரிய அளவிலான போஸ்ரர்கள்
துண்டுப் பிரசுரங்கள்
வைபவ அழைப்பிதழ்கள்
சமய சந்நிதான விழாக்கால போஸ்ரர்கள்

உங்கள் தேவை எதுவானாலும் நிறைவுடன் பெற்றுக்கொள்ள ஒருமுறை சுரபியை நாடுங்கள்.

குறைந்த கட்டணம்
குறுகிய தவணை

உங்கள் ஆக்கங்கள் உங்கள் வெளியீடுகள்
உங்கள் எண்ணக்கிடக்கைகள்
உங்கள் கற்பனை வளங்கள்

இவற்றிற்கு செயல் வடிவம்தான் சுரபியின் நேர்த்தியான கணினி தட்டெழுத்து அமைப்பும், தெளிவான அச்சுப்பதிப்பும்.
உங்கள் தெரிவு என்றும் ஒரே தெரிவாக இருக்கட்டும்.
அதுவே சுரபியாக இருக்கட்டும்.

## சுரபி பதிப்பகம்

267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி
2223922
2225107

# தவறான நிதி முகாமைத்துவத்தால் அரசு நெருக்கடிக்குள் சிக்கியுள்ளது

## பொ.ஐ.மு. பேச்சாளர் சரத் அமுனுகம

சரியான நிதி முகாமைத்துவம் இல்லாத காரணத்தால், பாரிய நிதி நெருக்கடியை அரசு எதிர்நோக்கியுள்ளதாக, பொதுஜன ஐக்கிய முன்னணியின் பேச்சாளர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஊடக மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே, அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசு எதிர்பார்த்த வரியை அறவிடமுடியாமல் இருக்கிறது. இதனால, இனிவரும் காலங்களில் வரவு - செலவுத்திட்டத்தைத் தயாரிக்க பிரச்சினையை எதிர்நோக்கவேண்டி ஏற்படும் என்றும் -

பிரதமமந்திரி, திறைசேரி அதிகாரிகள், நிதியமைச்சு அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டு உரையாடிய போதும் கூட, இதற்குரிய சாதகமான தீர்வு எட்டமுடியாமல் போயுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

வர்த்தகர்களுக்கு வரிச்சலுகையை வழங்குவதால் மட்டும் எந்தவித நன்மைகளும் வந்துவிடப்போவதில்லை. நிதிமுகாமைத்துவத்தைச்



சீர் செய்யமுடியாத நிலையே தொடர்ந்தும் நிலவிவருகின்றது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் - இந்த ஊடக மாநாடு எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் இடம்பெற்றது.

# நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆயுதங்களைக் களைய தீர்மானம்

(கொழும்பு)

நாடாளுமன்ற அங்கத்தவர்களுக்குக் கொடுக்கப்பட்ட துப்பாக்கிகளை மீளப்பெற்றுக் கொள்வதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

நாடாளுமன்ற அங்கத்தவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்துவரும் நிலையில், துப்பாக்கி அவர்களுக்கு தேவையற்றது எனவும், ஆனாலும் அதியுயர் பாதுகாப்புத் தேவைப்படும் அங்கத்தவர்களுக்கு ஆயுதங்கள் வழங்குவதற்கு அரசினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பொலிஸ் மா அதிபர் ஆனந்தராஜா சென்றவாரம் - 200 நாடாளுமன்ற அங்கத்தவர்களுக்குத் துப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேராவிடம் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# திருநெல்வேலி லயன்ஸ் கழக ஏற்பாட்டில் ஊனமுற்றோருக்கு முச்சக்கர வண்டிகள்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில், ஊனமுற்றவர்களுக்கு முச்சக்கர வண்டிகளை வழங்கும் நிகழ்வு- நேற்றுமுன்தினம் மாலை 4 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த முச்சக்கர வண்டிகளை, கனடா லயன்ஸ் கழகத்தின் ஆளுநர் செல்வராஜா - ஊனமுற்றவர்கள் 13 பேருக்கு வழங்கினார்.

இந்த நிகழ்வில் - யாழ். மாவட்ட லயன்ஸ் கழகத்தலைவர் ஜெயரெட்ணம், நல்லை ஆதீன சோமசுந்தர ஞானதேசிக சுவாமிகள், தமிழீழ கூட்டுறவுத் துணைப்பொறுப்பாளர் எழிலன், தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் யாழ்.மாவட்டத் தலைவர் ஜெயராஜ், யாழ்.மாவட்ட லயன்ஸ் கழக இணைப்பாளர் தங்கராஜா உட்பட, லயன்ஸ் கழக உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

# தெற்காசிய விளையாட்டுப் போட்டி 2004 ஆம் ஆண்டில் பாகிஸ்தானில்!

தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளை, அடுத்த வருடம் பாகிஸ்தானில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2001 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் பாகிஸ்தானில் நடைபெற ஏற்பாடாகியிருந்த இந்தப் போட்டிகள், அமெரிக்காவில் 2001 செப்ரெம்பர் 11 இல் நடத்தப்பட்ட தாக்குதல்களையடுத்துப் பிற்போடப்பட்டது.

பின்னர் மார்ச் 2002 இல் இந்தியா - பாகிஸ்தானுக்கிடையே நிலவிய பதற்றநிலையால், மீண்டும் பிற்போடப்பட்ட இப்போட்டிகள், கடந்த ஏப்ரல் மாதம் மீண்டும் ரத்து செய்யப்பட்டது. மீண்டும் இதுபற்றிக் கூடி ஆராய்ந்த இதன் நிர்வாகக் குழுவினர், 2004 ஆம் ஆண்டு பாகிஸ்தானில் இப்போட்டிகளை நடத்துவதாக முடிவெடுக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான், மாலைதீவு, இலங்கை, பங்களாதேஷ், பூட்டான், நேபாளம், இந்தியா, ஆப்கானிஸ்தான் ஆகிய 8 நாடுகள் இப்போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# புலிகளின் தியாகம், வெற்றியினால்தான் இந்தச் சமாதானநிலை தோன்றியுள்ளது!

## மன்னார்-வெகுஜன ஒன்றியத் தலைவர்

(மன்னார்)

தமிழர்கள் எத்தனையோ போராட்டங்களை நிகழ்த்தியிருந்தாலும், தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆயுதப் போராட்டத்தாலும், அவர்கள் புரிந்த தியாகம், வெற்றி என்பவற்றின் பலனாகவே இந்தச் சமாதானச் சூழ்நிலை தோன்றியுள்ளது.

இவ்வாறு, மன்னார் மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் பி.சிந்தாத்துரை, கடந்த புதன்கிழமை நடந்த மன்னார் மாவட்ட வெகுஜன ஒன்றியக் கூட்டத்தில் தெரிவித்தார்.

மீனவ சங்கத் தலைவர் ஜஸ்ரின் தலைமையில் நடந்த அக்கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது-

உயர் பாதுகாப்பு வலயங்களால், தமிழர்கள் மிகவும் துன்பமடைகின்றார்கள்.

சமாதானச் சூழ்நிலையைச் சரியாகப் பயன்படுத்த முடியாத நிலையில் - கடலில்கூட கடற்படையினரின் யுத்தநிறுத்த மீறல்கள் இடம்பெற்றுள்ளன. மூன்று தடவை இடம்பெற்ற யுத்தநிறுத்த மீறல்கள் தொடர்பாக, விடுதலைப் புலிகளுக்கு இன்னமும் பதில்சொல்லப்படவில்லை.


போர்நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்தான பின்னரும் தமிழ்மக்கள் நிம்மதியாகவும், சந்தோஷமாகவும் இல்லை. இதேவேளை - தென்பகுதியில் வாழும் சிங்களவர்கள் நிம்மதியாகவும், சந்தோஷமாகவும் வாழ்கின்றார்கள். தென்பகுதியில் எந்தவிதமான பயங்கரவாதமுமின்றி, குண்டுவெடிப்புகளுக்கு அஞ்சாத நிலையில், அவர்கள் வாழ்க்கை நடத்துகின்றார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## திருமலை மாவட்டம் தம்பலகாமத்தில்

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் தையற்பயிற்சி நிலையம் திறப்பு!

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் - தையற்பயிற்சி நிலையம் ஒன்று திருகோணமலை மாவட்டம் தம்பலகாமத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை தையற்பயிற்சி நிலையத்தின் திறப்புவிழா இடம்பெற்று, இருபது பெண்கள் இந்தப் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறவுள்ளனர். இந்த நிகழ்வில் - மங்கள விளக்கை தமிழர் புனர்வாழ்வுக் கழகத் திருகோணமலை மாவட்ட இணைப்பாளர் மாதவராஜா ஏற்றிவைத்தார். தம்பலகாமம் அரசியல் பொறுப்பாளர் திருமலை பயிற்சி நிலையத்தைத் திறந்து வைத்தார். இந்தப்பயிற்சி நிலையப் போதனாசிரியரிடம் கத்திரிக்கோல் மற்றும் துணிகளை கையளித்து திருமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக் உத்தியோகபூர்வமாகத் தையற்பயிற்சி வகுப்புக்களை ஆரம்பித்துவைத்தார்.



தம்பலகாமத்தில் தையற்பயிற்சி நிலையத்தில் பயிற்சியை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக் ஆரம்பித்து வைத்தார்.

# அமெரிக்காவில் நடைமுறையில் இருக்கும் சட்டத்துக்கெதிராக தமிழ் வைத்தியர் வழக்கு!

## அரசியலமைப்பை மீறுவதாக குற்றச்சாட்டு

அமெரிக்காவில் நடைமுறையில் இருக்கும் தேசப்பறறாளர் சட்டம் - அந்த நாட்டின் அரசியலமைப்பிற்கு முற்றும் விரோதமானது எனக் கூறி, அமெரிக்காவில் வாழ்கின்ற இலங்கைத் தமிழ் வைத்திய நிபுணர் ஒருவர் லொஸ் ஏஞ்சல்ஸ் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

அமெரிக்காவின் உலக வர்த்தக மையம்மீது - 2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதி தாக்குதல் நடத்தப்பட்டதையடுத்து, இந்தச் சட்டம் அங்கு கொண்டுவரப்பட்டது. இந்தச் சட்டப்படி அமெரிக்காவில் தடைசெய்யப்பட்டுள்ள இயக்கங்களுக்கு நிபுணத்துவ ஆலோசனை வழங்குவது உட்பட, பொருளாதார ரீதியில் உதவிபுரிவது தண்டனைக்குரிய குற்றமாகும்.

இப்போது இச்சட்டத்திற்கு எதிராக அமெரிக்காவில் வாழும் இலங்கைத் தமிழரான ஜெயலிங்கம் என்ற வைத்திய நிபுணர் வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

தான் இலங்கையின் வடக்கு-கிழக்கு பகுதிகளிலுள்ள அகதி முகாம்களில் வைத்திய வசதியின்றி இருப்போருக்கு - வைத்திய உதவி வழங்க விரும்புவதாகவும் ஆனால், இம்முகாம்களில் சில புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் அமைந்திருப்பதால், அங்கு மருத்துவ உதவி புரிந்தால், புலிகளுக்கு உதவியதாகத் தண்டிக்கப்படலாம் என அஞ்சுவதாகவும் ஜெயலிங்கம் தெரிவித்தார்.

இதன் காரணமாகவே - 'அரசியல் அமைப்பு உரிமைகளுக்கான நிலையம்' என்ற அரச சார்பற்ற நிறுவனம் மூலம் ஜெயலிங்கம் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

### சூது விளையாடியோருக்கு சிறைத்தண்டனையும், குற்றப்பணமும்

சூது விளையாடிய குற்றத்திற்காகப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட நான்கு பேர், நேற்றுமுன்தினம் பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

கரவெட்டி ராஜகிராமத்தைச் சேர்ந்த இவர்களுக்கு பருத்தித்துறை நீதிவான் அரியநாயகம், ஒவ்வொருவருக்கும் தலா மூவாயிரம் ரூபா குற்றப்பணமும், ஒருமாத சிறைத் தண்டணையும் விதித்துத் தீர்ப்பளித்தார். (130)

# ஊழியர் சேமலாப நிதியம் தனியார்மயப்படுத்தப்படாது!

## அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவிப்பு

ஊழியசேமலாப நிதியத்தைத் தனியார்மயப்படுத்தும் திட்டம் எதுவும் அரசாங்கத்திடம் கிடையாது என்று, தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி. - நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் - ஊழியர் சேமலாபநிதியத்தினை அரசு தனியார்மயப்படுத்தவுள்ளதா எனக் கேள்வியெழுப்பினார். அத்துடன், ஊழியர் ஒருவர் சேலாப நிதியினைப் பெற்றுக்கொள்வதற்கு, 450 கடிதங்களை நிதியத்திற்கு அனுப்பினார். இதுவரையும் அவருக்கு, ஊழியர் சேம லாபநிதி கிடைக்கவில்லை எனவும் விஜித ஹேரத் குறிப்பிட்டார்.

இதற்குப் பதிலளித்தபோதே - அமைச்சர் 'மகிந்த சமரசிங்க' மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும், மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதியத்தை நவீனமயமாக்க முயற்சி எடுக்கப்படவுள்ளது.

நவீனமயமாக்கத்தின்படி, இதுவரையில் இல்லாதவாறு அந்தந்த மாவட்டங்களிலேயே, ஊழியர் சேமலாப நிதியைப் பெற்றுக்கொள்ள வகைசெய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# உதைபந்தாட்டம் சம்பந்தமான பயிற்சிக் கருத்தரங்குகள்!

யாழ். மாவட்டப் பாடசாலைகளின் விளையாட்டுச் சங்கம்- யாழ். மாவட்ட விளையாட்டுத்துறையின் ஆதரவுடன், யாழ். மாவட்ட பாடசாலைகளின்- 13 வயது, 17 வயதுப் பிரிவுகளுக்குட்பட்ட மாணவர்களுக்கான, உதைபந்தாட்டம் சம்பந்தமான ஐந்து நாள் பயிற்சி வகுப்புக்களையும், பாடசாலைகளின் மத்தியஸ்தர்களுக்கான ஐந்து நாள் பயிற்சி வகுப்புக்களையும், யாழ். மாவட்ட பாடசாலைகளின் விளையாட்டுச்சங்கத்தால் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான தீர்மானக் கூட்டம் ஒன்று - அண்மையில் யாழ். இந்துக் கல்லூரியின் விளையாட்டுச் சங்கத்தலைவரும், கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி அதிபருமான என். சிவகடாட்சம் தலைமையில் இடம்பெற்றது. அத்துடன், இந்தச் சங்கம் - யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்டப் போட்டியையும் நடாத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானக் கலந்துரையாடலில் - யாழ்.மாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் மாதுளன், விளையாட்டுத்துறையைச் சேர்ந்த தீபன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

### போரூட் நிதியுதவியுடன் புனர்வாழ்வுக் கழகம்

# முல்லை மாவட்ட புனர்வாழ்வு திட்டங்களுக்கு நாற்பத்தைந்து இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு!

(வடமராட்சி கிழக்கு)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஆதரவுடன், முல்லை மக்கள் நலன் புரிச் சங்கத்தினால் - இவ்வாண்டு 45 இலட்சத்து 75 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீட்டில், 15 வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக, சங்க அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இந்த வேலைத் திட்டங்களுக்கான உதவியினை - போரூட் நிறுவனம் வழங்கிவருகின்றது. இந்த வேலைத் திட்டத்தின்கீழ் -

முல்லைத்தீவு, உண்ணாபுலவுப் பகுதியில் ஆறு பயனாளிகளுக்கு ஆடு வளர்ப்புத் திட்டத்தில் 5 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாவும், மாடு வளர்ப்புத் திட்ட்த்தில் 16 பயனாளிகளுக்கு இரண்டு இலட்சத்து 35 ஆயிரத்து 200 ரூபாவும், வீட்டுத் திட்டத்தில் 17 பயனாளிகளுக்கு 94 ஆயிரத்து 350 ரூபாவும், தற்காலிக வீட்டுத் திட்டத்தில் 31 பயனாளிகளுக்கு 3 இலட்சத்து 92 ஆயிரத்து 150 ரூபாவும்,

முன்பள்ளித திட்டத்தின் கீழ் - 15 முன்பள்ளிகளுக்கு 40 இலட்சத்து 7 ஆயிரத்து 364 ரூபாவும், பொதுக்கிணறு அமைக்கும் திட்டத்தில் 2 இலட்சத்து 39 ஆயிரத்து 552 ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு, சிலாவத்தைப் பகுதிகளில் மாடு வளர்ப்பதற்கு 15 பயனாளிகளுக்கு இரண்டு இலட்சத்து 50 ஆயிரத்து 500 ரூபாவும், மன்பிடித் திட்டத்தின் கீழ் - 30 ஆண் பயனாளிகளுக்கு நான்கு இலட்சத்து 50 ஆயிரம ரூபாவும், கணவன்மாரை இழந்த முப்பது விதவைகளுக்கு மீன்பிடித் திட்டத்தின் கீழ் - 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், தற்காலிக வீட்டுத் திட்டத்தில் 64 பயனாளிகளுக்கு 8 இலட்சத்து 9 ஆயிரத்து 600 ரூபாவும், பொது மண்டபம் அமைக்கும் திட்டத்தில் 200 பயனாளிகளுக்கு 5 இலட்சத்து 73 ஆயிரத்து 890 ரூபாவும் ஒதுக்கப்பட்டு, வேலைகள் நடைபெற்றுவருவதாக, அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொலிஸாரின் தாக்குதலுக்குள்ளானவர் மனிதஉரிமை ஆணைக்குழுவில் புகார்!

பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாடு ஒன்றையடுத்து, பொலிஸாரால் தாக்கப்பட்ட ஒருவர் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடொன்றைச் செய்துள்ளார்.

இச்சம்பவத்தில், கச்சாய் வடக்கு கொடிகாமத்தைச் சேர்ந்த கந்தையா தில்லையம்பலம் (வயது 42) என்பவரே, கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் வைத்துப் பொலிஸாரால் தாக்கப்பட்டார்.

பின்னர் - மேற்படி நபர், பல நாட்களாக வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றதாகவும், பொலிஸாரின் தாக்குதலினால், தான் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் - நேற்று அந்த நபர், மனிதஉரிமை ஆணைக் குழுவில் முறைப்பாடொன்றினைச் செய்துள்ளார்.

### தொழிற்துறைத் திணைக்கள அலுவலர்களுக்கான கலந்துரையாடல

(யாழ்ப்பாணம்)

தொழிற்துறைத் திணைக்கள அலுவலர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று, எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு - யாழ்.செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவிருப்பதால், அனைத்து அலுவலர்களையும் தவறாது சமுகமளிக்கும்படி, மாவட்ட அலுவலர் ப.ராகவன் கேட்டுள்ளார்.

## நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் கலைஞர்களின் இசை அர்ச்சனை

(நல்லூர்)

நல்லூர் கந்தசுவாமி கோயில் கார்த்திகைத் திருவிழாவை முன்னிட்டு - ஆலய உள்வீதியின் எட்டுத் திசைகளிலும், இசை அர்ச்சனை இடம்பெறவுள்ளது.

மூத்த கலைஞர்களும், இளைய கலைஞர்களும் இணைந்து - இந்த இசை அர்ச்சனையை நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சியை முன்னிட்டு, ஆலயத் திருக்கதவுகள் இரவு 8.30 மணிவரை திறந்திருக்கும்.

இசை அர்ச்சனையை முன்னிட்டு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில், நாளை 6.30 மணியளவில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடமபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கலந்துகொள்ள விரும்பும் இசைக் கலைஞர்கள், இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.



உள்ளூராட்சி வாரத்தையொட்டி, கரவெட்டிப் பிரதேச சபையினர் நடத்திய நிகழ்வில் பங்குபற்றிய சிறுமிகளுக்குப் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

## சமூகம் சரியான முறையில் முன்னேறுவதற்கு தாயின் வலுவூட்டலே துணையாக அமையும்!

### வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் கோகிலா மகேந்திரன்

(யாழ்ப்பாணம்)

தலைமைக்கான சரியான வலுவூட்டல் என்பது, ஒரு தாயின் வலுவூட்டலே. சமூகம் சரியான முறையில் முன்னேறுவதற்கும் இதுவே துணையாக அமையும் என, வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் கோகிலா மகேந்திரன் தெரிவித்தார்.

மூளாய் கூட்டுறவு வைத்திய சாலைப் பயிற்சி மண்டபத்தில் இடம்பெற்ற கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றுகையிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முழுச் சமூகமும் சிறந்த முறையில் முன்னேற்றமடைவதற்கு; ஒரு தாயானவள் - அவளது தலைமைக்கான சரியான வழியில் வலுவூட்டப்பட்டிருத்தல் அவசியமாகின்றது. தாயானவள் சரியான முறையில் வலுவூட்டப்படாது இருந்தால், சமூகம் கீழ்நிலை நோக்கியே செல்லும்.

பெண்களுக்கான சமூக வலுவூட்டலில், பல்வேறு சவால்களை நாம் எதிர்நோக்கியுள்ளோம்.

சமூகத்தில் முதன்மையாகத் திகழும் பெண்கள் - பல்வேறுபட்ட விமர்சனங்களையும், கேலிகளையும் துணிந்து முறியடித்ததாலும், கேலிகளுக்கும், விமர்சனங்களுக்கும் முகங்கொடுத்தவர்களாக இருந்ததாலேயேதான், அவர்களால் இன்று சமூகத்தின் மேல்நிலைக்கு வர முடிந்தது.

இந்நிகழ்வில் தலைமையுரை ஆற்றிய சிறுவர் கல்விக்கும், பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவன இயக்குநர் பொன்மலர் இராஜேஸ்வரன் கருத்துக்கூறுகையில், கடந்தகால அரசியலில் பெண்கள் அரசியலுக்காகப் பயன்படுத்தப்பட்டார்கள்.

இனிவரும் காலங்களில் - அரசியலில் பெண்கள் விலைபோகாது, தமது தனித்துவத்தைப் பேண வேண்டும் எனத் தெரிவித்தார்.

## சின்னஞ்சிறு செய்திகள்

### டிப்ளோமா கற்கைநெறிகளுக்கான விண்ணப்பம்

தேசிய கல்வி நிறுவகத்தின் டிப்ளோமா கற்கைநெறியில் சேர்ந்து கொள்ளவிரும்பும், வலிகாமம் - வடமராட்சி கல்வி வலயங்களில் கற்பிக்கும் பட்டதாரி ஆசிரியர்கள் - மானிப்பாய் இந்துக் கல்லூரியில் அதற்கான விண்ணப்பப் படிவங்களைப் பெற்று, உடன் விண்ணப்பிக்குமாறு சிரேஷ்ட விரிவுரையாளர் கு.சண்முகநாதன் தெரிவித்துள்ளார்.

### இலவச மருத்துவ முகாம்

உரும்பிராய் லயன்ஸ் கழகத்தினரின் ஆதரவில் - யாழ்.மருத்துவ பீட 4 ஆம் வருட மாணவர்களின் சமுதாய மருத்துவத்துறை வெளிக்கள செயற்பாட்டிற்கான, இலவச மருத்துவமுகாம் - இன்று காலை 9 மணி தொடக்கம் வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெறுவுள்ளது.

இதில் பொது மருத்துவப் பரிசோதனையும், சிறுவர்களுக்கான மருத்துவப் பரிசோதனையும் நடைபெற்று, இலவசமாக மருந்துகளும் வழங்கப்படவுள்ளது. இம்மருத்துவ முகாமில், அப்பிரதேச மக்கள் அனைவரையும் பங்குபற்றிப் பயன்பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது.

### திடீர் சோதனையின்போது போலி சிகரெட்டுக்கள் கைப்பற்றப்பட்டன!

சட்டவிரோதமான முறையில் யாழ். நகருக்குக் கடத்திவரப்பட்டு, விற்பனை செய்யப்பட்டுக் கொண்டிருந்த, தடைசெய்யப்பட்ட போலி சிகரெட்டுகள் - மதுவரித் திணைக்கள அதிகாரிகளின், திடீர்ச் சோதனை நடவடிக்கையின்போது கைப்பற்றப்பட்டன.

பல ஆயிரம் ரூபா பெறுமதியுள்ள இந்தச் சிகரெட்டுகளை வைத்திருந்தோருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## காணி அமைச்சர் யாழ். வருகிறார்

### பொலிஸ்மா அதிபரும் வருவார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் சமாதான விளையாட்டுவிழா தொடர்பாக ஆராய்வதற்கு, காணியமைச்சர் ராஜித சேனாரத்ன, பொலிஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜா ஆகியோர் நாளை யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

யாழ்.வரும் இவர்கள், யாழ்.செயலகத்தில் நாளை காலை 10 மணிக்கு இடம்பெறும் சமாதான விளையாட்டு விழாவை- யாழில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் தொடர்பான செயலமர்வில் கலந்துகொள்வதுடன் மற்றும் பல பிரமுகர்களையும் சந்திக்கவுள்ளதாகவும் தெரியவருகிறது.

## நுணாவில் சந்தி பஸ் நிலையம் புனரமைப்பு செய்யப்பட்டது!

(மட்டுவில்)

கைதடி - நுணாவில் சந்தியில், கடந்தகால இராணுவ நடவடிக்கையின் போது, சேதமடைந்த பஸ் தரிப்பிடம் புனரமைக்கப்பட்டுள்ளது.

இந்த பஸ் தரிப்பிடம் புனரமைக்கப்பட்டு, மஞ்சள் நிறக்காவி பூசப்பட்டுள்ளது. பார்ப்பதற்கு அழகாகக் காணப்படும் பஸ்தரிப்பிடத்தில் உள்ளூர் - வெளியூர் விளம்பரப் பிரசுரங்கள் ஒட்டப்பட்டுள்ளன.

கடந்த வியாழனன்று பஸ்தரிப்பிடத்திற்கு விரைந்த இராணுவத்தினர், அந்த விளம்பரங்களை அகற்றியுள்ளனர். அத்துடன், 'இது உங்களது இடம், விளம்பரங்களை ஒட்டாதீர்கள்' என்ற பதாகை ஒன்றும் தொங்கவிடப்பட்டுள்ளது.

## புனர்வாழ்வுக் கழகத்தின் உதவியுடன் பளைப்பிரதேசத்தில் 20 முன்பள்ளிகள்

(வடமராட்சி கிழக்கு)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தின் அனுசரணையுடன், பச்சிலைப்பள்ளி அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தினரால் - பளைப்பிரதேசத்தில் 20 முன்பள்ளிகள் நடாத்தப்பட்டு வருகின்றன.


இவற்றில் 12 முன்பள்ளிகளைச் சேர்ந்த 217 சிறார்களுக்கு உலக தரிசன நிறுவனம் போசாக்கு சத்துணவுகளை வழங்கிவருவதாகவும்,

இதேபோன்று, மற்றும் 8 முன்பள்ளிகளைச் சேர்ந்த 18 சிறார்களுக்கு யாழ். கியூடெக் நிறுவனம் - போசாக்குச் சத்துணவுகளை வழங்கிவருவதாகவும், பச்சிலைப்பள்ளி பளை அகதிகள் அபிவிருத்தி புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் த.புலேந்திரன் தெரிவித்தார். - (17)

வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

ஏழாவது அகவையில்



பெயர் : சி.சிவநீபா
முகவரி : வவுணாவத்தை, தெல்லிப்பளை.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:---------------------------------
முகவரி :---------------------------------
பிறந்த ஆண்டு:---------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
--------------------
பெற்றார் ஒப்பம்

# வருகிறது பொறுப்பு



மத்தியஸ்தர்கள் வேலைப்பளு அதிகம்.

தற்போது கிரிக்கெட் ஆட்டங்களில் மத்தியஸ்தர்களுடைய பழு ஓரளவுக்குக் குறைக்கப்பட்டிருந்தாலும், மைதானத்தில் அவர்கள் படும்பாடு பெரும்பாடாகத்தான் இருக்கின்றது. எடுத்ததற்கெல்லாம் 3 ஆம் நடுவரிடம் விட்டுவிடும் சில முறையீடுகளில் தற்போது சிறிய பிரச்சினைகள் தோன்றியுள்ளன. ICC ஆனது மத்தியஸ்தர் சங்கத்துடன் செய்து கொண்ட சில உடன்பாடுகளை வாபஸ் பெறவேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றது. அத்துடன், மைதான மத்தியஸ்தர்கள் விடுகின்ற பிழைகள் அவர்களுக்கு ஒரு சம்பளக்கழிவாகவே அமையும் வாய்புண்டு என ICC இல் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிலவேளைகளில் மைதானததில் ஆட்டக்காரர்களின் ஒழுக்கக்குறைபாடுகளை மத்தியஸ்தர்கள் கண்டுங்காணாமல் விடுவதும் ஒரு குறைபாடாகக் காட்டப்பட்டுள்ளது. எது எப்படி இருப்பினும், எதிர்காலத்தில் மத்தியஸ்தர்களுக்கு வேலைப் பழு அதிகம் என்பது உறுதி.

'No பம்மாத்து.

# தரவு பிடிக்குதா?

ஒருநாள் கிரிக்கெட்போட்டிகளின் வெற்றிக்குக் காரணமே வேகம்தான். அத்தோடு, அதன் பிரபல்யத்துக்கும் காரணம் அதுவே. இந்தவகையில் வேகமான சதங்கள், அரைச்சதங்கள் என்பன ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் மிகவும் சுவாரசியத்தைக் கொடுப்பன. அவுஸ்திரேலிய - பங்களாதேஷ் அணிகளுக்கிடையேயான இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், டேமியன் மார்ட்டின் இருபத்திரண்டு பந்துகளில் அரைச்சதம் பெற்றதும், சில சாதனை வரிசைகள் ஞாபகத்திற்கு வந்தன.

| | மொத்த ஓட்டம் | பந்துகள் அரைச்சதம் | எதிர் | வருடம் |
|---|---|---|---|---|
| சனத் | 76 | 17 | பாகிஸ்தான் | 1996 |
| சைமன்ஓ டொனால்ட் | 74 | 18 | இலங்கை | 1990 |
| அப்ரிடி | 102 | 18 | இலங்கை | 1996 |
| அப்ரிடி | 55 ஆ.இ. | 18 | நெதர்லாந்து | 2002 |
| மார்க் பௌச்சர் | 51 ஆ.இ. | 19 | கென்யா | 2001 |
| லான்ஸ் கெய்ன்ஸ் | 52 | 21 | அவுஸ்திரேலியா | 1983 |
| அகர்கார் | 67 ஆ.இ. | 21 | சிம்பாப்வே | 2000 |
| டக்ளஸ் மெரிலியர் | 56 ஆ.இ. | 21 | இந்தியா | 2002 |
| கபில்தேவ் | 72 | 22 | மே.இந்தியா | 1983 |
| சேவாக் | 55 | 22 | கென்யா | 2001 |
| டேமியன் மார்ட்டின் | 92 ஆ.இ | 22 | பங்களாதேஷ் | 2003 |

இந்தத் தரவுகளில் சிறந்ததொரு அவதானம் உண்டு. ஒருநாள் போட்டிகள் மிகவும் வளர்ச்சியடைந்த கட்டத்தில்தான், கூடுதலாக 90 களின் பிற்பகுதி மற்றும் இற்றைக்கு முன்பின்னான வருடங்களில்தான் அதிரடி வரிசை கூடுதலாக இருக்கின்றது.

ஆனால், உண்மையில் இதேவிதமான வேகமும், உணர்வும் கொண்டதாக, 1983 இல் லான்ஸ் கெயின்ஸ் (நியூசிலாந்து) மற்றும் கபில்தேவ் (இந்தியா) இருவரும் துடுப்பெடுத்தாடியுள்ளமையைப் பார்க்கும்போது, அவர்களின் சாதனையில் கூடியதொரு பெருமை இருப்பதுபோலத் தெரிகிறது.

- ரோஜா.

# விருக விருக மரியன்



மரியன் ஜோன்ஸ்

தடகளப் போட்டிகளில் சிறிதுகாலம் மரியன் ஜோன்ஸ் இல்லாமற்போனது, தடகள இரசிகர்களுக்கு பெரிய இழப்பாகத்தான் இருந்திருக்கும். 100 m ஓட்டத்தின் முதல் பாய்ச்சலில் இருந்து இறுதி முடிவுவரை TV கமராக்கள் அவரையே மையமாகக் கொண்டு ஓட்ட லாவண்யங்களை முழுமையாக விழுங்கிக் கொள்வது, அற்புதமான காட்சி.

தன் மகவுடன் சில மாதங்கள் இருந்த மரியன் - கோல்டன் லீக் தடகளப் போட்டிகள் பிறேசில் செப்ரெம்பரில் நடைபெறும்போது, அங்கு திரும்பவும் தன் ஓட்டத்தை ஆரம்பிப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. 100 m மற்றும் 200m ஒலிம்பிக் தங்கப்பதக்க வீராங்கனை மரியன் ஜோன்ஸ் எவ்வாறாயினும், பாரிஸ் உலக சாம்பியன்ஷிப் போட்டிகளில் இம்மாதம் கலந்து கொள்ளப்போவதில்லை என்பது உறுதி. இருந்தும், தனது வாழ்க்கைத் தோழரான ரிம் மொன்ட்கொமரி 100 m ஓட்டம் போட்டியில் எவ்வாறு சாதனை படைக்கப்போகிறார் என்பதைப் பார்க்க பாரிஸ் செல்வதாக இருக்கிறார்.

ஓடாமலே அவர் எவ்வளவு முக்கியத்துவம் பெறுவார் என்பது அப்போது தெரியும். 2000 ஆம் ஆண்டு சிட்னி ஒலிம்பிக் போட்டி நடைபெற்றபோது - குண்டெறிதல் சாம்பியன் CJ ஹண்டரின் மனைவியாக இருந்தவர் மரியன். ஆனால், பின்னர் ஏற்பட்ட மணமுறிவினால், அதனைத் தொடர்ந்து ரிம் மொன்ட்கொமரியைத் துணையாக்கிக் கொண்டார். இவர்கள் இருவருக்குமே ஜூனில் மகன் பிறந்தான். தற்போது 2004 இல் எதன்ஸ் ஒலிம்பிக் போட்டிகளை மையமாக வைத்துக் களம் இறங்குகிறார் மரியன். இவரை வீழ்த்துவது சுலபம் அல்ல. இவரின் வரவு என்பது தடகளப் போட்டிகள் உலகத்தில் மிக முக்கியமான சம்பவமாக எடுத்துப்பேசப்படும்.

- மக்டலின் மரியா.

# இது எல்லோருக்குமான அழைப்பு

கடந்தவாரம் கிடைத்த செய்திகளின்படி - இலங்கையின் முன்னணி தடகள வீரர்களுக்கான அமைப்பொன்று ANTFA என்ற சுருக்கப் பெயரில் அமைக்கப்பட்டமையை அறிந்துகொள்ள முடிந்தது. தற்போது தடகளவீரர்களின் நலன்களைக் கருத்திற்கொண்டு, தடகள வீரர்களின் இன்னொரு சங்கம் அமைக்கப்படவுள்ளதாகச் செய்திகள் வருகின்றன.

இதில் சிறப்புக்குரிய விடயம் என்னவெனில், இந்தக் கழகத்தை அமைப்பதில் ஆர்வங்காட்டி இருப்பவர், இலங்கையின் முன்னணி ஓட்ட வீராங்கனை சுசந்திகா ஜயசிங்கவேதான். தான் புதியதொரு சங்கம் அமைக்க உத்தேசித்தமைக்கான காரணங்களை எடுத்துக்கூறும் சுசந்திகா அமைக்கப்பட்டுள்ள ANTFA, முன்னணி தடகள வீரர்களின் மேம்பாட்டையும், நலன்களையும் மட்டுமே கருத்திற்கொண்டுள்ளது. இதேவேளை, வசதி வாய்ப்புக்கள் குறைந்த முன்னுக்கு வரத்துடிக்கும் இளம் தடகள வீரர்களின் நலன்கள் எடுத்துக்கூறப்படவேண்டும் என்பதாலேயே, அந்த முக்கிய நோக்கத்தைக் கொண்டேதான் ஒரு கழகத்தை ஆரம்பிக்கப்போவதாகச் சுசந்திகா கூறியுள்ளார்.

வசதி வாய்ப்புக்கள் குறைவாகவுள்ள தடகள வீரர்கள் மற்றும் பயிற்றுநர்களின் வேண்டுகோளையும் கருத்திற்கொண்டுள்ளதாகவும், தன் முயற்சிக்கு இதுவும் ஒரு முக்கிய காரணம் என்றும் சுசந்திகா கூறியுள்ளார்.

மேலும், தற்போதே பல வீரர்கள் - தான் ஆரம்பிக்கப்போகும் கழகத்தில் சேர்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளார்கள் என்றும் கூறுகிறார். தனது சர்வதேச உறவுகளை வைத்து, தேவை நாடிநிற்கும் கிராமப்புற, வசதிகுறைந்த வீரர்களுக்கு நிறைய உதவிகள் செய்யமுடியும் என்றும் கூறுகின்றார்.

மேலும் தன்னால் செய்யமுடியாவிட்டால், யாரால் முடியும் என்கிறார் தன்னம்பிக்கையுடன்.பற்பல சந்தர்ப்பங்களில் பலவேறு அமைப்புகள், நிறுவனங்கள் சிறந்த கொள்கைகளை முன்நிறுத்தி ஆரம்பிக்கப்படாலும், ஏனோ எதிர்பார்த்த இலக்கை எட்டமுடியாதுபோகும் நிலையைக் கடந்தகாலங்களில் கண்டுள்ளோம்.

ஆனால், சுசந்திகாவின் நோக்கம், இலக்குப் போன்றவை சரியான திசையில் வலிமை குறைந்தோரின் நலன்நாடிச் செல்வது தெரிகின்றது. இதற்கு நிறைந்த அங்கத்துவம் தேவை. இதிலும் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை. ஏனெனில், சுசந்திகாவின் பின்னால் அணிதிரள ஆயிரக்கணக்கான ஆர்வம் நிறைந்த தடகளவீரர்கள் தயாராகவே இருப்பார்கள்.

- நிமலா.

# வெறும் பயிற்சி ஜாலமா



- மொன்ட் கொமரி -

கடந்த சில மாதங்களுக்குள் உலகின் முன்னணி நூறு மீற்றர் ஓட்ட வீரர்கள் - குறைந்தது பத்து பிரதான தடகள நிகழ்வுகளிலாவது மாறிமாறி கலந்திருப்பார்கள். 100 m ஓட்டத்தைப் பொறுத்தவரை முதலாவதாக வருபவரும் மாறிமாறியே வந்துகொண்டிருக்கிறார்கள்.

இந்த வரிசையில் - ஸ்ரொக்ஹோப் கிறோண் பிரி (GRAND PRIX) தடகளப் போட்டிகளில் 100m ஓட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட ரிம் மொன்ட்கொமரியை, அமெரிக்காவைச் சேர்ந்த ஜஸ்ரின் கட்லின் 10.15 செக்கன்களில் ஓடி, கவிழ்த்து விட்டிருக்கிறார். கடந்த மாதம் ட்வெய்ன் சேம்பர்சிடம் - மொன்டகொமரி தோற்றார் என்பது பழைய கதை. இது ஒருபுறமிருக்க லண்டனில் நடைபெற இருக்கும் தடகளப் போட்டிகளில், தான் நிச்சயம் பங்குகொள்வேன் என்று மொன்ட்கொமரி கூறியுள்ளார். ஆனால், குறிப்பாக 100 m ஓட்ட வீரர்கள் எல்லோருமே பத்து செக்கன்களுக்குள் ஓடி வெற்றிபெற்றாலே, ஏதென்ஸ் ஒலிம்பிக்கின் தங்கப்பதக்கம் பற்றிச் சிந்திக்கமுடியும். இந்தவகையில், முன்னணி வீரர்கள் எல்லோரும் ஏதோ இயலாதவர்கள்போலக் காட்டிக்கொண்டு, இம்மாதம் 23 ஆம் திகதி ஆரம்பமாக இருக்கும் பாகிஸ்தான் வேர்ல்ட் சாம்பியன்ஷிப் மற்றும் 2004 ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளுக்கான ஒருவகைப் பயிற்சியிலேயே ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள்போலத் தெரிகின்றது. இதில் ஓரளவு உண்மை இருந்தாலும், இவர்களின் உடற்தகுதி நிலையும், முடிவின் மாற்றங்களுக்குக் காரணமாக அமைகிறது என்பதில் சந்தேகமில்லை. எதுஎவ்வாறாயினும், இம்மாத பாரிஸ் வோல்ட் சாம்பியன்ஷிப் நூறு மீற்றர் பொறுத்து வெகு சூடாக இருக்கப்போகிறது என்பது மட்டும் உண்மை.

- சரண்யா

# இதுவே பிரதானம்

யாழ்.மாவட்டத் தாச்சிச் சங்கம் நடாத்திவரும் தாச்சிப்போட்டி இறுதியாட்டம்- இன்று கட்டுடை மானிப்பாய், விநாயகர் விளையாட்டு மைதானத்தில் பி.ப. 4.30 மணிக்கு மிகச் சிறப்பாக நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இந்த வரிசையில் இது ஆறாவது சுற்றுப் போட்டியாகும். இந்த இறுதியாட்டத்தில் - சங்குவேலி ஸ்ரீ அம்மாள், இணுவில் அண்ணா, சண்டிலிப்பாய் சிவசக்தி மற்றும் இணுவில் கலாஜோதி அணிகளை வென்று, ஒருபுறம் நவாலி தென்றல் அணியும், மறுபுறம் கைதடி வளர்மதி, சுதுமலை நாவலர், மயிலிட்டி வள்ளுவர் அணிகளை வென்று, கட்டுடை விநாயகர் அணியும் களம் காண்கின்றன.

முன்னதாக - 1998, 1999, 2000 ஆம் ஆண்டுகள் தொடந்து மூன்றுமுறை தென்றல் அணி வெற்றிக்கிண்ணத்தைத் தட்டிச்செல்ல, 2001 ஆம் ஆண்டு சண்டிலிப்பாய் வசந்தஸ்ரீ அணியும், 2002 ஆம் ஆண்டு இணுவில் கலாஜோதி அணியும் வெற்றிவாகை சூடின. இம்முறை யார் என்பது மாலையில் தெரிந்துவிடும். எமது பாரம்பரிய பெருமைமிகு விளையாட்டான இவ்விளையாட்டுவிழா தொடர்ந்து வெற்றிகரமாக நடைபெற்று வருவது மிகுந்த மனநிறைவானதாகும். வளரவேண்டிய, வளரும் தகுதிகள் முற்றும் கொண்டதொரு விளையாட்டு இதுவாகும். கபடி போன்ற கிராமிய விளையாட்டுக்கள் ஆசிய போட்டி அளவிற்கு வளர்ந்திருக்கும்போது, தாச்சிப்போட்டியும் மிகவிரைவில் அந்த நிலைக்கு வளரமுடியும். அதற்கான நாற்றுகள்தான் இந்தச் சுற்றுப்போட்டிகள். இவற்றை பல சிரமங்களுக்கு இடையில் வளர்க்கும் நிர்வாகிக்கும், இன்றைய நிகழ்வைச் சிறப்பிக்க மனம்விரும்பிச் சமூகமளிக்கும் கௌரவ விருந்தினர்கள் எல்லோரும் மிகவும் மதிப்புக்கும், நன்மதிப்புக்கும் உரியவர்கள்.

- சித்ரா.

# சூடான பெக்காம்



தற்போது விளையாட்டு உலகில் ஒரு கலக்குக் கலக்கிக்கொண்டிருக்கின்ற ஆண் - பெண் ஜோடி எனறு சொன்னால், அது இங்கிலாந்து அணியின் முன்னணிக் காற்பந்தாட்ட வீரர் டேவிட் றொபேட் ஜோசப் பெக்காம் மற்றும் ரஷ்யாவின் முதல்தர டெனிஸ் நட்சத்திரமாகிய அன்னா கோர்னிக்கோவா. இவர்கள் இருவரும் விளையாட்டு உலகுக்குப் புதியவர்கள் அல்ல. இருந்தாலும், இவர் இருவரையும் விளையாட்டு உலகம் ஒருகணம் உற்றுப்பார்க்க வேண்டிய தேவையை - இவர்களது சாதனைகளும், திறமைகளும் கொண்டுவந்திருக்கின்றன. பெக்காம் 1975 ஆம் ஆண்டு, மே மாதம், 2 ஆம் திகதி பிறந்தவர். இவருடைய மனைவி விக்டோரியா. ஒரு பொப் பாடகி. இவருக்கு இரண்டு குழந்தைகள் இருக்கின்றார்கள். அண்மையில் இவர் ஜப்பான் நாட்டுக்கு வந்தபோது, அந்த நாட்டு இளைஞர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களிடையே அவருக்கு நல்ல வரவேற்புக் கிடைத்தது. பெக்காம் உள்ளூர் கழகமாகிய ரியல் மட்றிட்டில் ஆடிவருகின்றார். இவர் ஒரு வாரத்துக்கு ரூபா 90 இலட்சத்தினை ஊதியமாகப் பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது. இவர் 1992 ஆம் ஆண்டு முதன்முதலில் காற்பந்தாட்டப் போட்டிகளில் ஆடத்தொடங்கினார்.

அடுத்தது, டெனிஸ் நட்சத்திரம் அன்னா கோர்னிக்கோவா. இவர் பிறந்தது 1981 ஆம் ஆண்டு, ஜூன் மாதம், 7 ஆம் திகதி. திருமணமாகாத மிகவும் திறமையான இவர், ரஷ்ய நாட்டைச் சேர்ந்தவர். இவர் பகுதி நேரமாக நடிப்புத் தொழிலையும் செய்கின்றார். இவருடைய மொத்தச் சம்பளம் 2500 மில்லியன் ரூபாவாகும். இவருக்கு நிறைய ரசிகர் மன்றங்கள் - இவருடைய நாட்டில் மட்டுமன்றி, வேறு நாடுகளிலும் காணப்படுகின்றது. இவருடைய பொழுதுபோக்கு நகைகள் மற்றும் அழகிய ஆடைகளைக் கடை கடையாக ஏறி இறங்கிக் கொள்வனவு செய்வது. அதேபோல் பெக்காமுக்கு வீட்டிலே சாரம் அணிந்து இருப்பது மிகவும் விருப்பம்.



பெக்காம் மனைவி விக்ரோரியாவுடன் முரட்டுப்பிடி

உண்மையிலே, இவர்கள் இருவரும் நாட்டுக்காகப் பெருமை சேர்ப்பதனை மறுக்கமுடியாது. ஆனால், ஒருபடி மேலாக, பெக்காம் ஒரு அற்புதமான காற்பந்தாட்டவீரர். அதிலும் **Free Kick** அடிப்பதில் இவருக்கு நிகர் இவர்தான். இதனால்தான், இவருக்கு இங்கிலாந்து அணியின் - அணித்தலைவர் பதவியுடன் ஐரோப்பியக் கோப்பை உலகக்கிண்ண காற்பந்தாட்டப் போட்டிகளில் கலந்துகொள்வதற்காக ஆயத்தமாகியுள்ளார். அதேபோல், கோர்னிகோவாவும் **W.T.A** இன் பலதரப்பட்ட டெனிஸ் போட்டிகளில் கலந்துகொள்வதற்காகத் தன்னைத் தயார்படுத்திக் கொள்கின்றார். இந்த இரண்டு ராஜாவும், ராணியும் அண்மையில் எடுக்கப்பட்ட கருத்துக்கணிப்பின் படி, ஆசிய நாட்டு மக்கள் (இரசிகர்கள்) மத்தியில் ஒருவிதக் காய்ச்சலை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். உதாரணமாக - இளைஞர்கள் எல்லாம் பெக்காமுடைய பெயர் பொறிக்கப்பட்ட **T Shirt** இனை அணிந்து கொண்டு திரியும் காட்சி. அதேபோல், கோர்னிகோவா மிகவும் இறுக்கமான ஆடைகளை விரும்பி அணிபவர். அவருடைய நாகரிகம், எமது நாட்டுப் பெண்களையும் பிடித்திருக்கின்றது என்றால் மிகையாகாது.

ஆனால், பெக்காம் ஒரு முரட்டுத்தனமான காற்பந்தாட்ட வீரராக வர்ணிக்கப்படுகிறார். மைதானத்தில் பந்தினை உதைக்கும்போது, பந்துக்கு எங்களுடைய ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்க வேண்டியநிலை. இதற்கு' நேர்மாறு கோர்னிகோவா. மிகவும் சாந்தம் கொண்ட சிறு பிள்ளைத்தனம். ஆனால், டெனிஸ்

## குளிரான கோர்னிகோவா

ஆடும்போது மட்டும் அசுரவேகம். இன்னும் சில மாதங்களில் இவர்கள் இருவருடைய வெற்றிச் செய்திகளும் எங்களுடைய காதில் ஒலிப்பது உறுதி.

**PN.சுதர்சன்.**

# விளையாட்டு அரங்கம்

## வேண்டாமே விஸ்றைங்கம்

மீண்டும் ஒரு பெல்ஜியம் இறுதியாட்டம். இம்முறை கலிபோர்னியாவில் நடைபெற்ற **ACURA CLASSIC** இறுதியாட்டத்தில் - ஜஸ்ரின் ஹெனின் ஹார்டென் மோதியது. கிம் கிளிஸ்டருடன். பத்துலட்சம் அமெரிக்க டொலர் பரிசுக்காக இருவரும் மோதினர். ஆனால், மோதல் விளையாட்டில் மட்டுமன்றி, சிறிது அப்பாலும் சென்றுவிட்டது. நான் இப்படி விளையாடினேனா என்று என்னாலேயே நம்பமுடியாமல் இருந்தது என்றார் வெற்றிவாகைசூடிய ஜஸ்ரின் ஹெனின். இருந்தும் முதலாவது, இரண்டாவது செக்கன்களுக்கு இடையில் தனது காயத்துக்கு மருந்துபோட ஹெனின் எடுத்துக்கொண்டநேரம் அத்தியவசியமானது. தாங்கள் இருவரும் சந்திக்கும்போது, இப்படி இவர் செய்வது வழக்கமாகிவிட்டது என்கிறார் கிம் கிளிஸ்டர். இது ஒரு உளவியல் சமநிலையைக் குலைக்கும் செயல் என்று குற்றம் சுமத்துகிறார் அவர். இருந்தும் ஹெனினின் விரைவான முன்னேற்றத்தையும், திறமையையும் கிளிஸ்டர் மறுப்பேதுமின்றி அங்கீகரிக்கின்றார்.

ஆனால், குற்றச்சாட்டுப் பற்றி ஹெனின் கருத்துக்கூறுங்கையில்- கிளிஸ்டர்ஸ் தோற்றுவிட்ட ஆற்றாமையினால்தான் இப்படிக் கூறுகிறார். மேலும், முதற்தர வீராங்கனைகள் எல்லோருமே, நான் முதன் நிலைக்கு வருவதை விரும்பவில்லைப்போலத் தெரிகின்றது. நான் சிறிது உயரம் குறைவாகவும், பலம்குறைந்தனவாகவும் இருப்பதால், இவள் என்ன எங்களை வெல்வது என்று இறுமாப்பாக எண்ணுகிறார்கள் போலத் தெரிகின்றது. நான் தோற்றத்துடன், முழு மைதானத்தையும் ஆக்கிரமித்து விளையாடுவதை முதற்தர வீராங்கனைகளால் சகித்துக்கொள்ள இயலவில்லைப்போலத் தெரிகின்றது. ஆனால், நான் எப்போதும் நியாயபூர்வமாக விளையாடுவதிலேயே நம்பிக்கை கொண்டுள்ளேன். எனினும், ஏன் என் மிது சேறு பூசுகிறார்கள் என்றுதான் புரியவில்லை என்கிறார் ஹெனின் விம்பிள்டன். இறுதிப் போட்டியிலும் செரினாவும், ஹெனினும் சிறிது முரண்பட்டுக்கொண்டார்கள். **GRAND SLAMS** என்பவற்றைத் தவிர்த்துப் பார்த்தால், தொடர்ந்து பல முதன்மைநிலை வீர, வீராங்கனைகள் கலந்துகொள்ளும் டெனிஸ் போட்டிகள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. அதேவேளை, களைகளும் சேர்ந்து பயிருடன் வளர்வதுபோல போட்டி, பொறாமை, முரண்பாடுகளும் வளர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. இதற்குப் பல்வேறு காரணங்கள் இருந்தாலும், பரிசுத்தொகையும் இலங்கை ரூபாவில் கோடிக்கணக்காக இருப்பதும் காரணமாக இருக்கலாம்.

**- ரோஜா**



அக்குரா கப் பெற்ற ஹெனின் பரிசு 10 கோடி ரூபா

# அற்புதமான அணித்தலைவர்

கிரிக்கெட்டில் பொறுப்பு வாய்ந்த அணித்தலைவர்களைக் காண்பது அரிது. ஆனாலும், அண்மைக்காலமாக சோபித்து, இரசிகர் மனதில் இடம்பிடித்தவர்களில் தென்னாபிரிக்க அணித்தலைவர் 'கிரேம் ஸ்மித்' என்ற 22 வயது நிரம்பிய இளம் வீரரும் ஒருவர் என்றால் அது மிகையாகாது.

மிக சொற்பகாலத்தில் அணித்தலைவராக நியமனம் பெற்று, அண்மைக்காலமாக நடந்த இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில், அடுத்தடுத்த இரு டெஸ்ட் தொடரில், இரண்டு இரட்டைச்சதங்கள் குவித்த நான்காவது வீரர் என்ற பெருமையைக் கொண்டுள்ளார் ஸ்மித்.

இவர் விளையாடிய இங்கிலாந்துக்கெதிரான மூன்று டெஸ்ட் போட்டிகளிலும், மொத்தமாக 20 மணித்தியாலங்கள், 10 நிமிடங்கள ஆடுகளத்தில் நிதானமாக நின்று மொத்தமாக 621 ஓட்டங்களைத் தென்னாபிரிக்காவுக்காகப் பெற்றுக்கொடுத்துச் சொந்த நாட்டில் சாதனை படைத்துள்ளார்.

அத்துடன், நின்றுவிடாது இரண்டாவது டெஸ்ட் போட்டியில் லோட்ஸ் மைதானத்தில் 259 ரன்களை எடுத்து, இதற்கு முன் இதே மைதானத்தில் 1930 இல் இங்கிலாந்துக்கு எதிராக விளையாடிய டொன் பிரட்மனின் 254 ரன்களைக் கடந்து, சாதனை படைத்துள்ளார் என்பது பாராட்டப்படவேண்டியதே.

தென்னாபிரிக்காவின் 277 (இரண்டாவது டெஸ்டில்) பெற்ற முதல்வீரர் என்பதோடு, அந்தப் போட்டியில் ஒன்பதரை மணித்தியாலங்கள் ஆடுகளத்தில் நின்றும், இதற்கு முன 1969 - 1970 காலப்பகுதியில் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஆட்டத்தில் 622/9 என்ற ஸ்கோரைக் கடந்து, 682/6 (3ஆவது டெஸ்டில்) ஐப் பெற்றுச் சாதனைக்கு வலு வூட்டக் காரணமாக இருந்த இந்த இளம் அணித்தலைவருக்கு, நல்ல ஒரு எதிர் காலம் காத்திருக்கிறது. ஒரு அணியின் தேவையறிந்து, தனது பொறுப்பைச் செம்மையாகக் கடைப்பிடிதது, வெற்றிக்கு உரமாக நிற்கும் இந்த வீரரைப் பாராட்டாமல் இருக்கமுடியுமா என்ன?

ஆனாலும், உலகப் புகழ்வாய்ந்த தென்னாபிரிக்காவின் அதிரடி, சகலதுறை வீரர் லான்ஸ் குளுஸ்னர் போன்றோருடன், அணித்தலைவரான புதிதில் தேவையற்ற விதத்தில் முரண்பட்டுநின்று, அவரை விமர்சித்து அறிக்கைகளை விட்டதை எதிர்காலத்தில் தவிர்த்தால், கிரோமி ஸ்மித் நிச்சயமாக இரசிகர்கள் மனதில் நல்ல ஒரு இடத்தைப் பிடிப்பார்.



கிரேம் ஸ்மித் இங்கிலாந்தையா தேடுகிறீங்க

## ஸ்மித்

மறுபக்கத்தில் பார்த்தால், இங்கிலாந்து அணி மூன்றாவது டெஸ்டில் இரண்டு நாட்களுக்குள் 509 ஓட்டங்களைப் பெற்றால், இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்கலாம் என்ற நிலை. வலுவான இலக்கு எப்படி முடியும். 173 ஓட்டங்களுக்குள் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து நிற்க, கேவலமான தோல்வி நிச்சயப்படுத்த, வழமையாக இங்கிலாந்து அணிக்கு உரமாக நிற்கும் அந்த இளம் **All Rounder** பிளிண்டோவ், மார்க் பௌச்சருடன் மிக அறபுதமாக ஆடி, 146 பந்துகளில் 142 ரன்களை (18 பவுண்டரிகள், 5 சிக்ஸர்கள் உள்ளடங்கலாக) அடித்து, அணிக்கு 417 ரன்களைப் பெறறுக்கொடுத்து, ஒரு இன்னிங்ஸ் மற்றும் 92 களால் தோல்வியடைந்தாலும், கௌரவத்தைக் காப்பாற்றிய இந்த நாயகனுக்கும் மனம் திறந்த வாழ்த்துக்கள்.

**- வீ.ஏ.கோபி**

# தர்ஷா DECENT

தேசிய வியைாட்டு விழாவில் தமயந்தி தர்ஷா தனது 400 m நிகழ்விலிருந்து விலகிக்கொண்டமைக்குக் காரணம் - கணுக்கால் உபாதையாக இருந்தாலும், அதி லிருந்து சுகமடைந்து, பாரிஸ் சாம்பியன்ஷிப் போட்டிகளில் கலந்துகொள்வார் என்று எதிர்பார்க்கப்பட்டாலும், தற்போது கணுக்கால் உபாதை தீவிரமடைந்திருப்பதால், பாரிஸ் செல்லமாட்டார் என்ற ஏமாற்றமான செய்தி வந்திருக்கின்றது.

28 வயதாகும் தர்ஷா 200m, 400m என்ற தன் நிகழ்வுகளில் - 1994, 1998, 2002 என்றவாறு மூன்று தடவைகளிலும் **ASIAN GAMES** இல் தங்கப்பதக்கம் வென்று, சாதனை புரிந்தவர். இதேவேளை, வருகிற மாதம் பிலிப்பீன்ஸ் - மணிலாவில் நடைபெறவுள்ள ஆசிய சாம்பியன்ஷிப் போட்டிகளில் பங்குகொள்வதற்குத் தான் தயாராகவேண்டிய தேவை முக்கியத்துவப்படுவதால், பாரீஸ் போட்டிகளிலிருந்து விலகுவதாகக் கூறியுள்ளார். இங்கு தர்ஷாவின் விலகல் பற்றிய செய்தி, வேறொரு கண்ணோட்டத்திலும் பார்க்கப்படுகின்றது. அதாவது, அரைகுறைத் தகுதியோடு பாரீஸ் செல்வதாககூறி, இலட்சக்கணக்கான ரூபாய்களை வீணாக்காமல் பொறுப்புணர்ச்சியோடு முன்னதாகவே தனது முடிவைத் தெரிவித்த தர்ஷாவின் கண்ணியம் சுட்டிக்காட்டப்படுகின்றது.



விண்செலவில் ஆர்வமில்லை

வீரர்களுக்குத் துணை என்ற பெயரில் பல்வேறு பதவி நாமங்களில் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணங்களில் உத்தியோகத்தர்கள் உலகம் சுற்றும் செயல்கள் வன்மையாகக் கண்டிக்கப்பட்டும், அவர்கள் திருந்தாத சூழலில் இரண்டாம் பேச்சுக்கே இடமின்றி, பாரீஸ் சென்றிருக்கக்கூடிய தர்ஷா தன் உயர்குணத்தால உண்மைபேசி, உயர்ந்து நிற்கிறார். வேகமாக ஓடித் தங்கப்பதக்கம் பெறும் தர்ஷா ஓட்டமெதுவும் இல்லாமலே மனங்களில் பதிந்துவிட்டாரே. **GEM OF A PERSON.**

**- வெரோனிக்கா.**

ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

எப்பொருள் யார் யார்வாய் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு.

*திருக்குறள்.*

# நமது நோக்கு

## நீடிக்குமா சர்ச்சை?

திருகோணமலை மாவட்டம் - கிண்ணியா பகுதியிலுள்ள குரங்குப்பாஞ்சானில் அமைந்துள்ள புலிகளின் சிறியதொரு முகாமை பெரிய விடயமாக்கி - பூதாகாரப்படுத்தப்பட்டதால் இது சிக்கல் நிறைந்த விடயமாக மாறியிருக்கிறது.

புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள காட்டுப்பகுதியில்தான் இந்தப் புதிய முகாம் அமைந்திருந்தது. ஆனால், இந்த முகாம் புலிகளால் புதிதாக அமைக்கப்படவில்லை என்பது தான் முக்கியமானதாகக் குறிப்பிடப்படுகிறது.

குரங்குப்பாஞ்சான் காட்டுப்பகுதியில் புலிகளின் முகாம் நீண்டகாலமாகவே இயங்கிவந்தபோதும் - இதைப் படையினர் அறியாதிருந்துள்ளனர். சண்டைகள் நடந்த காலப்பகுதியில் இந்தக் காட்டுப்பகுதியில் அரச படையினரின் நடமாட்டம் இருக்கவேயில்லை.

ஆனால், சமாதான உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டு - ஒன்றரை வருடங்கள் கழிந்தபின்னர், அண்மையில் இந்தக் காட்டுப்பகுதிக்குள் படையினர் சென்றபோது தான், புலிகளின் முகாமை அவர்கள் கண்டனர்.

இதன்பின்னர் இந்த விவகாரத்தினை அரசபடையினர் கண்காணிப்புக்குழுவிடம் எடுத்துச்செல்ல - நிலைமை மெல்ல மெல்ல இறுகத் தொடங்கியது.

சரியான முறையான விசாரணைகளின்றியே, இது அரச படையினரின் கட்டுப்பாட்டுப்பகுதி என கண்காணிப்புக் குழுவும் அவசரப்பட்டுத் தீர்மானம் எடுத்துள்ளதாகவே தெரிகின்றது.

தமது கட்டுப்பாட்டுப்பகுதிகளைப் புலிகள் வரையறுத்துக் கூறியிருந்த பிரதேசத்துக்குள் - குரங்குப்பாஞ்சான் காட்டுப்பகுதியும் உள்ளதென்பதை புலிகளின் திருகோணமலை மாவட்டக் கட்டளைத்தளபதி கேணல் பதுமன் தெளிவுபடுத்தியிருந்தபோதும், இதை ஒரு விவகாரமாக்கி அரசியல் இலாபம் தேடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

குரங்குப்பாஞ்சான் காட்டுப்பகுதியில் உள்ள புலிகளின் முகாம், இராணுவத்தினரின் முகாம் அமைந்துள்ள பகுதியில் இருந்து சுமார் 15கி.மீ தொலைவில் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

மொத்தத்தில் இந்தப் பிரச்சினையை அரசபடைகள் தமக்குச் சார்பான வகையில் கொண்டுசெல்வதற்கு கண்காணிப்புக் குழுவைப் பயன்படுத்துவதில் வெற்றி கண்டிருக்கின்றன என்றே சொல்லலாம்.

ஆரம்பம் முதலே, குரங்குப்பாஞ்சான் முகாம் விவகாரத்தில் - புலிகள் மற்றும் அரசதரப்பும் கண்காணிப்புக் குழுவும் தத்தமது கருத்துக்களில் ஒரேவிதமான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றனர்.

புலிகள், தமது கட்டுப்பாட்டுப் பகுதி என்றும், பழைய முகாமே என்றும் வாதிட்டு வருவதோடு, இதுபற்றிப் பேச்சு நடத்த வேண்டிய தேவையே கிடையாது என்றும் திட்டவட்டமாகக் குறிப்பிட்டுள்ளனர்.

அரச தரப்போ, இது புரிந்துணர்வு உடன்பாட்டு மீறல் என்றும் குற்றஞ்சாட்டி வருவதோடு - புலிகள் இந்த முகாமை அகற்றவேண்டுமென்றும் கோரிவருகின்றது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஆரம்பத்திலிருந்தே இந்த முகாமைப் புலிகள் அகற்ற வேண்டும் என்ற தனது பிடியில் இறுக்கமாகத் தொடர்ந்து இருந்து வருகின்றது.

இந்தநிலையில் - இந்த முகாம் பழையதென்றும், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ளதென்பதுமான உண்மைகளை ஒரு புறம் வைத்துவிட்டுப் பார்த்தால் -

புரிந்துணர்வு உடன்பாட்டுக்கு முரணாக நெடுந்தீவில் கடற்படையினரால் முகாம் அமைக்க முடியுமாக இருந்தால், குரங்குப்பாஞ்சானில் புலிகள் ஏன் முகாம் அமைக்கக் கூடாது என்ற கேள்வியின் நியாயத்தன்மைக்கு யாரால் பதிலளிக்க முடியும்?

குரங்குப்பாஞ்சான் காட்டிற்குள் உள்ள, அதுவும் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள ஒரு பழைய முகாமை அகற்றுவதில் - அரசும், கண்காணிப்புக்குழுவும் காட்டுகின்ற பிடிவாதப் போக்கு ஒரு முரண்பாடான சூழ்நிலையைத் தோற்றுவித்துக் கொண்டிருக்கிறது.

இராணுவ ரீதியில் முக்கியத்துவம் அதிகமற்ற இந்த முகாமை ஒரு பிரச்சினைக்குரிய விவகாரமாக்கி அரசியல் ஆதாயம் தேடும் முயற்சியில் - அரச தரப்பும், சிங்கள பௌத்த தேசியவாத சக்திகளும் ஈடுபட்டிருக்கின்றன.

ஜே.வி.பியின் விமல் வீரவன்ச, இந்தப் பகுதியை முஸ்லிம்களின் பாரம்பரிய பூமியென்று, பிரச்சினையை வேறொரு திசையில் கொண்டுசெல்வதற்கு முனைந்துள்ளார்.

இந்தக் கட்டத்தில்தான், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவும் இந்த விடயத்தில் தனது இயலாமையை வெளிப்படுத்தியுள்ளது. இந்த இயலாமையை உடனடியாகவே இலங்கை அரசிடமும், நோர்வே அரசிடமும் தெரியப்படுத்தியிருக்கிறது.

இதைத் தீர்க்க, சொல்ஹெய்ம் அடுத்த செவ்வாயன்று இங்கு வரவுள்ளார். யார் எங்கு வந்தாலும் இந்தப் பிரச்சினைக்கான காரணத்தைச் சரியாகப் புரிந்துகொள்ளாவிட்டால், அது பிரச்சினைக்குரிய விவகாரமாகவே நீடிக்கலாம்.

# அழிக்கப்பட்ட தென்னந்தோட்டங்களை மீளமைக்க அரசாங்கம் உதவவேண்டும்!

## வடமாகாண தெங்கு உற்பத்தியாளர் சங்கம் பிரதமருக்கு மகஜர்

கடந்தகாலத்தில் நடைபெற்ற பாரிய யுத்தங்களினால், வடமாகாணத்தில் பொருளாதார ரீதியாக பாரிய இலாபமீட்டிய ஐந்து இலட்சத்துக்கு மேற்பட்ட தென்னைமரங்கள் இராணுவ நடவடிக்கையின் காரணமாக அழிக்கப்பட்டுள்ளன. இவற்றினுடைய இழப்பினை ஈடுசெய்ய - அரசாங்கம் உதவவேண்டும் என, வடமாகாண தெங்குப் பயிர்ச்செய்கையாளர் சங்கம் இந்து கலாசார அமைச்சர் ஊடாக, பிரதமருக்கு மகஜர் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளது.

இம்மகஜரில் வடமாகாணத்தில், குறிப்பாக யாழ்.குடாநாட்டில் பச்சிலைப்பள்ளி, தென்மராட்சிப் பிரதேசங்களில் பெருமளவிலான தென்னைமரங்கள் அழிக்கப்பட்டதனால், இதனை நம்பியிருந்த ஏராளமான உரிமையாளர்கள், வேலையாட்கள் வருமானமின்றித் தவிக்கின்றனர்.

தெங்குச் செய்கையாளர்கள் கடந்த பலவருடங்களாக- தமது துன்பதுயரங்கள் பற்றி பலமுறை பெருந்தோட்ட அமைசசர், புனர்வாழ்வு - புனரமைப்பு அமைச்சர் மற்றும் பிரதமருக்கும் பல மகஜர்களை அனுப்பியிருந்தும், இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அழிக்கப்பட்ட தென்னைகளுக்கான நட்டஈட்டினை அரசாங்கம் இனியும் தாமதமின்றி வழங்க முன்வரவேண்டும். தென்மராட்சிப் பிரதேசங்களிலுள்ள இராணுவம், அங்கிருந்து உடனடியாக வெளியேறவேண்டும்.

தென்னந்தோட்டங்களுக்கு ஏற்படுத்தப்பட்ட அழிவுகள் பற்றிய மதிப்பீடுகளை மேற்கொள்ள - ஒரு குழு நியமிக்கப்பட வேண்டும். தெங்குத் தோட்டங்களில் நிலைகொண்டுள்ள இராணுவம் அங்கிருந்து உடனடியாக வெளியேறவேண்டும்.

தென்னந்தோட்டங்களுக்கு ஏற்படுத்தப்பட்ட அழிவுகள் பற்றிய மதிப்பீடுகளை மேற்கொள்ள ஒரு குழு நியமிக்கப்பட வேண்டும். தெங்குத் தோட்டங்களில் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகள் அகற்றப்படவேண்டும்.

நாட்டின் அபிவிருத்திக்கு, பெரும் பங்களிப்புச் செய்துவந்த தெங்குச் செய்கையாளர்கள், யுத்தம் காரணமாக மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஈராக் யுத்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட தேயிலை உற்பத்தியாளருக்கு - நிவாரணம் வழங்க விசேட திட்டத்தினை, அரசாங்கம் அமுல்செய்தது. ஆனால், தெங்குச் செய்கையாளர்களுக்கோ பாராபட்சம் காட்டப்பட்டுள்ளது. எமக்கு மட்டும் ஏன் இந்த பாராபட்சம் காட்டப்படுகின்றது.

எமது தெங்குத் தோட்டங்களுக்கு ஏற்படுத்தப்பட்ட அழிவுகளுக்கும், சேதங்களுக்கும் நஷ்டஈடு வழங்கப்படாவிடில், அதனைச் சட்டரீதியாக எவ்வாறு பெறவேண்டும் என்பதுபற்றி நாம் சிந்திக்க நிர்ப்பந்திக்கப்படுவோம். எனவே, எமது இப் பிரச்சினை தொடர்பாக - தாங்கள் கருணைகூர்ந்து இவ்விடயத்தில் எமக்கு உதவவேண்டும் எனக் கோருவதுடன், அழிக்கப்பட்ட தெங்குத் தோட்டங்களை மறுசீரமைப்புத் திட்டத்துக்கு ஐந்தாண்டுத் திட்டம் ஒன்றினையும் அமுல்செய்ய ஆவன செய்யுமாறு வேண்டுகிறோம், என அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மகஜரின் பிரதிகள் - யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், தெங்குப் பயிர்ச்செய்கைச் சபையின் தலைவர், தெங்குப் பயிர்ச்செய்கை சபையின் பிராந்திய உதவி முகாமையாளர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

# கல்வியங்காடு விபத்து; வயோதிபர் படுகாயம்!

(யாழ்ப்பாணம்)

ஹையேஸ் வானும், சைக்கிளும் விபத்துக்குள்ளானதில்- வயோதிபர் ஒருவர் கையிலும், தலையிலும் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கல்வியங்காட்டுச் சந்தைக்கு அருகாமையில் நேற்று இடம் பெற்ற இந்தச்சம்பவத்தில், கச்சேரியடி, நல்லூரைச் சேர்ந்த தம்பி யோகராஜா (வயது 70) என்பவரே காயமடைந்தவராவார்.

# இந்திய கடனுதவியைப் பயன்படுத்தி தொகுதிக்கு ஒருகோடி ரூபா நிதி!

## அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம்

இந்தியாவிடம் இருந்து பெறப்படும் கடனுதவியைப் பயன்படுத்தி, தேர்தல் தொகுதி ஒன்றுக்கு, ஒரு கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்வதற்கு, அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்ற இந்த அமைச்சரவைக் கூட்டத்தில்,

கிராமிய அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்காகத தேர்தல் தொகுதிகள் ஒவ்வொன்றுக்கும் - ஒரு கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்படத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியைப் பயன்படுத்தி - வேலைவாய்ப்பு, விவசாயம் சம்பந்தமான உபகரணங்கள், அத்தியாவசியப் பொருட்களைப் பொதுமக்களுக்கு விநியோகிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு - கைத்தொழில் அமைசசர் றோகித போகொல்லாகம பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளார்.

# சிங்களம், தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு 13 வருடமாகியும் நிரந்தர நியமனம் இல்லை!

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ்ப் பாடசாலைகளில் - சிங்களத்தையும், சிங்களப் பாடசாலைகளில் - தமிழையும் போதிப்பதற்கென நியமிக்கப்பட்ட 190 ஆசிரியர்களுக்கு, இதுவரை நிரந்தர நியமனம் வழங்கப்படாததால், நெருக்கடியான நிலையில் அவர்கள் வாழ்ந்துவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

1990 இல் வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநராக இருந்த லயனல் பெர்னாண்டோவின் உத்தரவின் பேரிலேயே, இந்த ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்களுக்கு ஆரம்பத்தில் 1500 ரூபா கொடுப்பனவாக வழங்கப்பட்டது.

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் பணியாற்றிவரும் இந்த ஆசிரியர்களுக்கு, தற்போது 2500 ரூபா கொடுப்பனவாக வழங்கப்பட்டுவருகின்றது.

இவர்களை நிரந்தரமாக்குவதற்குப் பல பரீட்சைகள் நடத்தப்பட்டபோதும், நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# தென்மராட்சிக்கு முழு நேர மின்சாரம் இணைப்பு வேலைகள் ஆரம்பம்!

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேசத்திற்கு 24 மணிநேர மின்சார விநியோகத்தினை ஆரம்பிக்குமுகமாக, செம்மணிப் பகுதியில் மின் இணைப்பு பணிகள், மின்சார சபையினரால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

யுத்தகாலத்தில் செம்மணிப்பகுதியில் புதைக்கப்பட்ட மிதிவெடிகளால், மின்சார விநியோகப்பணிகள் மேற்கொள்ள முடியாதிருந்தது. அப்பகுதியில் காணப்பட்ட மிதிவெடிகள்- 'ஹலோ ட்ரஸ்ட்' நிறுவனத்தினரால் அகற்றப்பட்டு, தற்போது உயரழுத்தம் கொண்ட மின் இணைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வேலைகள் பூர்த்தியடைந்ததும், தென்மராட்சிப் பகுதிக்கான 24 மணிநேர மின்சாரம் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இந்த வேலைகள் பூர்த்தியடையாமையினாலேயே, தென்மராட்சிப் பகுதிக்கான 24 மணிநேர மின்விநியோகம் தாமதமாகியமை குறிப்பிடத்தக்கது.

# சங்கத்தானைப் பகுதியில் மிதிவெடி அகற்றும் பணி!

(தென்மராட்சி)

சாவகச்சேரி - சங்கத்தானை பகுதியில் 'ஹலோ ட்ரஸ்ட்' நிறுவனத்திரால் மிதிவெடிகள் அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சங்கத்தானை புகையிரத நிலையத்திற்குப் பின்புறமாக உள்ள நான்கு ஏக்கர் நிலப்பரப்பிலேயே, இப்போது மிதிவெடிகள அகற்றப்பட்டு வருகின்றது.

இந்த நிலப்பகுதி பாரிய இயந்திரங்கள்மூலம் - ஒரு அடி ஆழம்வரை மண்தோண்டப்பட்டுக் குவிக்கப்பட்டுள்ளது. இந்த மண்ணை பரிசோதனை செய்து உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே, மிதிவெடி அகற்றப்பட்ட காணிகள் பொதுமக்களிடம் கையளிக்கப்படவுள்ளதாக, 'ஹலோ ட்ரஸ்ட்' அலுவலர் ஒருவர் தெரிவித்தார்.

இராணுவத்தினரால் வழங்கப்பட்ட வரைபடத்தின்படியே- இந்த மிதிவெடியகற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக, அவர் மேலும் தெரிவித்தார்.

# கிழக்கு மாகாணத் தளபதியாக மேஜர் ஜெனரல் மல்லவராய்ச்சி!

கிழக்கு மாகாணத்திற்கு இராணுவக் கட்டளைத் தளபதி ஒருவர் முதன்முறையாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் முதல் - மேஜர் ஜெனரல் நந்த மல்லவராட்சி, கிழக்குக் கட்டளைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை காலமும், கிழக்கு மாகாண இராணுவத் தளபதிகளாக கட்டளைப் பிரிவுத் தலைவர்களே செயற்பட்டுவந்தனர்.

இதேவேளை, 21 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதியாக காமினி கெட்டியராட்சியும், 22 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதியாக மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோனும், கூட்டுப்படைத் தலைமைத் தளபதியாக காமினி ஜெயசுந்தரவும் நியமனம் செய்யப்பட்டிருக்கின்றனர்.

# தென்மராட்சி உயர் பாதுகாப்பு வலயத்தில் விவசாயம் செய்ய அனுமதி கிடைக்குமா?

தென்மராட்சியின் வளம் கொழிக்கும் விவசாய நிலங்கள் யுத்த நடவடிக்கைகளினால் அழிவடைந்து, மீளவும் புத்துயிர் பெற்று வருகின்றன. இவ்வேளையில் இராணுவத்தினரின் அதியுயர் பாதுகாப்புவலயம் என்ற சிலந்தி வலையினால், தென்மராட்சியில் அதிகளவு விவசாய நிலங்களைக் கொண்ட பெரும் நிலப்பரப்பு, சிறைப்பட்டுள்ளது.

வளம் கொழிக்கும் தென்மராட்சி மண்ணில் - மையமாக விளங்குகின்ற சாவகச்சேரி நகருக்கு, தெற்குப் புறமாக 5000 ஏக்கர் வயல் நிலங்கள், அதியுயர் பாதுகாப்பு வலயமாக்கப் பட்டுள்ளது. இத்தகைய அதியுயர் பாதுகாப்பு வலயப் பகுதியாக தனங்கிளப்பு, மறவன்புலோ, அறுகுவெளி, நுணாவில் தெற்குப் பகுதிகள், கோயிலாக்கண்டி, நுள்ளான்பிட்டி, சங்குப்பிட்டி, கேரதீவினை அண்டிய விவசாய நிலங்களை உள்ளடக்கியதாக, காணப்படுகிறது. இத்தகைய பிரதேசங்களில் 1999 மார்கழி மாதம் ஏற்பட்ட யுத்த நடவடிக்கைகளினால் - தனங்கிளப்பு, கோயிலாக்கண்டி, அறுகுவெளி, மறவன்புலோ போன்ற பகுதிகளிலிருந்து மக்கள் வெளியேறினர்.

இத்தகைய சில பகுதிகளில் மக்கள் இன்றும் குடியிருக்க அனுமதி வழங்கப்படவில்லை. புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி - ஒன்றரை வருடம் பூர்த்தியாகின்ற நிலையில், புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் குறிப்பிட்டதற்கிணங்க, மக்கள் இன்னும் சொந்த இடங்களில் குடியிருக்க அனுமதி வழக்கப்படவில்லை. இத்தகைய புரிந்துணர்வு ஒப்பந்த மீறல்களை எவரும் கவனிப்பதாகத் தெரியவில்லை.

1999 ஆம் ஆண்டு மார்கழி மாதம் இத்தகைய பகுதிகளிலில் 5000 ஏக்கர் வரையான நிலப்பரப்புகளில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. நெற்செய்கை மூலம் சிறந்த விளைச்சல் பெறப்பட்டது.

இத்தகைய காலப்பகுதியில் ஏற்பட்ட யுத்த நடவடிக்கையினால், விவசாயிகள் பயிரிட்ட நெற்செய்கையை சில பகுதிகளைத் தவிர ஏனைய பகுதிகளில் அறுவடை செய்யக்கூட படையினர் அனுமதி வழங்கவில்லை. இத்தகைய இராணுவ செயற்பாடுகளினால், பெருமளவு விவசாயிகள் நஷ்டம் அடைந்ததோடு, பெரும் மன விரக்திக்கும் உள்ளாகின்றனர். சிலர் கடன்காரர்கள் ஆக்கப்பட்டுள்ளனர்.

இத்தகைய விவசாய நிலங்களில் மேற்கொள்ளப்படும் நெற்செய்கை மூலம், தென்மராட்சிப்பிரதேசம் ஓரளவு நெல்லுற்பத்தியில், தன்னிறைவினை அடையக்கூடியதாக இருந்தது.

இதன் மூலம் - மக்கள் தமது சுயதேவைக்குத் தேவையான நெல் உற்பத்தியை மேற்கொண்டு, நெல் உற்பத்தியில் தன்னிறைவை அடைந்தனர்.

**க.கஜீபன்**

அந்தப் பிரதேசங்கள் இன்று வரை உயர்பாதுகாப்பு வலயமாகக் காணப்படுகிறது. இது சம்பந்தமாக- விவசாய சம்மேளனங்கள், அரச அதிகாரிகள் போன்றோர் இராணுவ உயர் அதிகாரிகளுடன் சந்தித்து, உரையாடியபோதுகூட, எதுவித விமோசனங்களும் கிடைக்கவில்லை.

இந்த விவசாய நிலங்களின் எல்லைகளைக்கூட - அடையாளம் காண முடியாத அளவில் புல்டோசர்கள், மூலம் காவலரண்கள் அமைக்கப்பட்டு காணப்படுகின்றது. இந்த வயல்நிலங்களில்கூட - கண்ணிவெடிகள், மிதிவெடிகள் புதைக்கப்பட்டு காணப்படுவதாக, மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இது சம்பந்தமாக - இராணுவ உயர் அதிகாரிகளோடு கலந்தாலோசனை நடத்தப்பட்டபோது அவர்கள் கண்துடைப்புக்காக, அப்பகுதி நிலங்களில் விவசாயம் மேற்கொள்வதற்கு அனுமதி அளிப்பதாகக் கூறுகின்றனர். இது வெறும் கண்துடைப்பேயாகும்.

இந்த இராணுவக் காவரண்களை அகற்றுவதற்கே பல மாதங்கள் செல்லும். இந்த நிலையில், இனிவரும் காலங்கள பெரும்போக நெற்செய்கையை மேற்கொள்வதற்கான காலப்பகுதியாக இருப்பதால், படையினர், எமது நிலங்களில்- நாம் விவசாயம் மேற்கொள்வதற்கு அனுமதி வழங்குவார்களா? என, தென்மராட்சி விவசாயிகள் ஏங்கித்தவிக்கின்றனர்.

இவர்களின் ஏக்கம் நீங்குமா? இல்லை தொடருமா?



செய்திக்கட்டுரை

மக்கள் மாடுகள் மூலமும், உழவு இயந்திரம் மூலமும் பண்படுத்தி விவசாயம் மேற்கொண்ட விவசாய நிலம்- இன்று ஷெல்விழுந்த பூமியாகவும், இராணுவ கவசவாகனங்களின் போக்குவரத்துப் பாதையாகவும் காணப்படுகின்றன.

இத்தகைய விவசாய வயல்களைக்கொண்டு, அமைக்கப்பட்ட பாதை சாவகச்சேரி, நுணாவில் வைரவர் கோவிலுக்கு அருகாமையிலுள்ள ஓர் வீதியிலிருந்து ஆரம்பித்து - தனங்கிளப்பு. மறவன்புலோ போன்ற பகுதிகளுக்குச் செல்கின்றது.

1999 ஆம் ஆண்டு இடப்பெயர்வுக்குப்பின்னர் - இன்றுவரை இவ்விடங்களைப் பார்வையிடக்கூட, இராணுவத்தினர் அனுமதி வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# என்.கே.பத்மநாதன் நினைவாக யாழில் இசைவேளாளர் கல்லூரி



"நாதஸ்வர ஓசையிலே
தேவன் வந்து பாடுகிறான்.
சேர்ந்துவரும் மேளத்திலே
தேவி நடமாடுகிறாள்"

இது ஒரு திரைப்படப் பாடலில் வரும் ஒருவரி.

நாதஸ்வரத்தையும், அதனுடனிணைந்த கவியையும் சுருக்கமாக எடுத்துக்கூறும் வரிகள் இவை.

நாதஸ்வரமும், தவிலும் தமிழனுக்கே உரியகலை.

தமிழ்நாட்டில் திருவாவடுதுறை ராஜரத்தினம்பிள்ளையின் நாதஸ்வர இசைபற்றிப் பேசாதவர் இல்லை.

இசைவேளாளர்கள் என்று நாதஸ்வர, தவில் வித்துவான்களுக்குப் பெருமை தேடித்தந்தவர் ராஜரத்தினப்பிள்ளை என்று, இன்றும் அவரைப் பெருமையுடன் நினைவு கூருவார்கள்.

ராஜரத்தினம்பிள்ளைக்குப் பின்னர் - நாதஸ்வரத்துக்குப் பெருமை சேர்த்தவர் காருகுறிச்சி அருணாசலம் பிள்ளை. தவிலுக்குப் பெருமை சேர்த்தவர்கள் சிலரும் தமிழ்நாட்டில் இருந்தார்கள், இருக்கிறார்கள். இவர்களில் நீடா மங்கலம் பற்றியும் சொல்லுவார்கள்.

தமிழ்நாட்டில் சென்று அங்குள்ள தவில் வித்துவான்களையெல்லாம் மூக்கில் விரல்வைக்கச் செய்த, யாழ்பபாணம் - அளவெட்டித் தவில் மேதை லயஞான குபேரபூபதி என்று பட்டம் பெற்ற எஸ்.தெட்சணாமூர்த்தியையே சாரும். இவருக்கு முன், இவரது குருவாகவுமிருந்த யாழ்ப்பாணம் காமாட்சி சுந்தரம், இந்தியா சென்று புகழ்நாட்டியவர்.

இதேபோல், யாழ்ப்பாணம் - அளவெட்டி நாதஸ்வரமேதை என்.கே.பதமநாதன் - இலங்கையிலும், தமிழ்நாட்டிலும் தமது நாதஸ்வர இசையினால் பெரும்புகழ் எய்தியவர்.

நல்லூர்க் கந்தனின் கர்ப்பக்கிரகத்திலேயே கந்தனுக்கு நடுச்சாமத்தில் புகழ் வாசித்துப் புகழ்பெற்றவர் நாதஸ்வரச் சக்கரவர்த்தி அளவெட்டி என்.கே.பத்மநாதன்.

தமிழ்நாட்டில் நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன் போன்ற பலர், இன்றும் புகழ்பெற்றுத் திகழ்கின்றனர். இலங்கையிலும், யாழ்ப்பாணத்தில் இசை வேளாளர்களுக்குப் பெருமை சேர்த்த பலர், இன்றும் புகழுடன் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.

நாதஸ்வர, தவில்கலை ஞான குருகுலமரபில் பரம்பரை பரம்பரையாக வளர்ந்து வந்திருக்கிறார்கள்.

ஆந்திராவைச் சேர்ந்த ஷேக் சின்ன மௌலானா என்ற இஸ்லாமியர் நாதஸ்வரக் கலையைப் பயின்று, இன்று அங்கொரு புதிய பரம்பரையே உருவாகியிருக்கிறது.

இலங்கையிலும், யாழ்ப்பாணத்திலும் அளவெட்டி, இணுவில் ஆகிய இடங்களில் இன்றும் இசை வேளாளர் பரம்பரை வளர்ந்துகொண்டே இருக்கிறது. கைதடியில் ஒரு பழனி- தனது தவில் வாத்தியத்தினால், தமது பிறந்த ஊருக்கே பெருமை சேர்த்தார்.

பரம்பரை பரம்பரையாகக் குருகுலக் கல்வி மூலமே நாதஸ்வரத் தவில் இசை வளர்ச்சி பெற்று வருகிறது. சிலர் இந்த இசைப்பரம்பரையைத் தொடர - வேறு அரச உத்தியோகங்களிலும், தொழிலிலும் ஈடுபட்டு, இக்கலையையே மறந்தும் விட்டனர்.

நாதஸ்வர, தவில் இசைக்கலை தொடர்ந்தும் பரம்பரை பரம்பரையாக, குடும்பக்கலையாக குருகுல முறையில் வளர்ந்து வரமுடியுமா? இப்பொழுதே இசைவேளாளர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அரசாங்க சேவைகளையும், வேறு தொழில்களையும் நாடிச்சென்று கொண்டிருக்கின்றனர்.

இதனால்தான் - அண்மையில் மறைந்த நாதஸ்வரச் சக்கரவர்த்தி அளவெட்டி என்.கே.பத்மநாதன்- நாதஸ்வர, தவில் கல்லூரி உருவாக்கப்படவேண்டுமென்றும், அங்கு இக்கலைகள் பயிற்றுவிக்கப்பட வேண்டுமென்று அறிவுறுத்தி வந்தார். இசை வேளாளர்கள் கல்லூரியில் பயிற்றுவிக்கப்பட்டு, உருவாக்கப்பட வேண்டுமென்று கனவு கண்டார்.

நாதஸ்வரச் சக்கரவர்த்தி என். கே.பத்மநாதனின் இந்தக் கனவு பற்றிச் சமீபத்தில், யாழ்ப்பாணத்தில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில், அவரது உருவப்படத் திரைநீக்கம் செய்யப்பட்ட சமயத்தில் பலரும் எடுத்துக் கூறினார்கள்.

இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட இந்து கலாசார விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் - இநத வைபவத்தில் நாதஸ்வரச் சக்கரவர்த்தியின் கனவை, தமது அமைச்சு நிறைவேற்றும் என்று உறுதியளித்தார்.

இசை வேளாளர் கல்லூரி யாழ்ப்பாண்த்தில் விரைவில் நிறுவப்படும். அதை, இந்து கலாசார அமைச்சே நிறுவும். இந்த இசை வேளாளர் கல்லூரி நாதஸ்வரச் சக்கரவர்த்தி என்.கே.பத்மநாதன் பெயரில், அவரது நினைவாகவே நிறுவப்ப டும் என்று அமைச்சர் மகேஸ்வரன் அறிவித்தது, பத்மநாதனின் நாதஸ்வரத்திலிருந்து வந்த தேனிசை போல் இனிப்பாக இருந்தது.

இந்நிகழ்வில் உரையாற்றிய யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸ் - இன்னும் ஒருபடி மேலேபோய், "சர்க்கரைப் பந்தலில் தேன்மழை பொழிந்ததுபோல்" இசை வேளாளர் கல்லூரியில் பயின்று, இசை வேளாளர்களாகச் சித்திபெறும் மாணவர்களுக்கு, யாழ். பல்கலைக்கழகம் சான்றுப்பத்திரங்களை வழங்கும் எனறும் அறிவித்தார். அதாவது, அமைச்சர் உறுதியளித்தபடி நாதஸ்வர, தவில் கலைஞர்களை உருவாக்குவதற்கு, இசை வேளாளர் கல்லூரி நிறுவப்பட்டபின், அது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து - அந்தக் கல்லூரியும் பல்லைக்கழக அந்தஸ்தைப் பெறும் என்பதைச் சூசகமாகத் தெரிவித்தார்.

இந்த இரு முக்கிய அறிவிப்புக்களைத் தொடர்ந்து உரையாற்றிய பேராசிரியர் அ.சண்முகதாஸ் கற்றுவரும் நாதஸ்வர, தவல் இசையை எவரும் விரும்பிக் கற்கக்கூடிய சூழ்நிலை, இந்த இசை வேளாளர் கல்லூரி நிறுவப்படுவதன் மூலம் நிறைவேறும் என்று விளக்கமளித்தார். குருகுல முறைப்படி நாதஸ்வர, தவில் கலைகளைப் பயில்வோர் தொடர்ந்து பயிலலாம். அதேசமயம், இசைவேளாளர் கல்லூரியில் இந்த இசைக்கலைஞர்களின் பரம்பரையினரும் அல்லாத எவரும் பயின்று, இசைவேளாளர்களாக வந்து சாதனை நிலைநாட்டலாம் என்றும்

**கோபு**

சொன்னார். ஒரு இஸ்லாமியரான ஷேக்சின்ன மௌலானா ஸாகிப் நாதஸ்வரத்தில் புகழ்பெற்று விளங்கமுடியுமேயானால், நாங்களும் ஏன் அதைப் பயின்று சாதனை நிலை நாட்ட முடியாது என்று பேராசிரியர் சண்முகதாஸ் கேட்டார்.


நாதஸ்வரச் சக்கரவர்த்தி என்.கே பத்மநாதனின் உருவப்படத் திரை நீக்க வைபவத்தில் வெளியான இந்த அறிவிப்பு பத்திரிகையாளர்களுக்குத் தெரியாது போலிருக்கிறது. அந்த நிகழ்வுக்கு வந்த பத்திரிகை நிருபர்களும் - படம் திரைநீக்கப்பட்டதும் சென்றுவிட்டார்கள்போலும். இதனால், இசை வேளாளர் கல்லூரி நிறுவப்படும் என்ற இனிப்பான அறிவிப்புச் செய்திகளில் இடம்பெறவில்லை.

# மிருகங்கள் மூலம் பரவும் நோய்கள்

பகுதி 11

(தொடர்ச்சி.....)

நாய்கள் உடலின் பல்வேறு உறுப்புக்களையும் நக்கும் பழக்கமும், மலம் உண்ணும் பழக்கமும் கொண்டவை. அத்துடன், அசுத்தமான இடங்களில் படுக்கும் பழக்கமும் உடையன. இதனால், அவற்றின் உடல் முழுவதும் இப்புழுக்களின் முட்டைகள் ஒட்டியிருக்கும் வாய்ப்புண்டு. சிறுவர்கள் நாய்களுடன் விளையாடிய பின்னர், வாயில் விரலை வைக்கும்போது, இப்புழுக்களின் முட்டைகள் அவர்களது வாய்மூலம் உணவுக்கால்வாயை அடையும். இங்கு முட்டைகள் பொரித்துப் புழுக்களாகி, உடலின் பல்வேறு பகுதிகளிலும் நீர்க்குழியங்களைத் தோற்றுவிக்கலாம்.




நீர்க்குழியங்கள் (CYST) தோன்றும் அங்கத்திற்கேற்ப, நோயின் குணங்குறிகள் வேறுபடும். மூளையில் நீர்க்குழியம் ஏற்படின் வலிப்பும், சதையியில் நீர்க்குழியம் ஏற்படின், சலரோகமும் ஏற்படலாம். பெணகளின் சூலகம், ஆண்களின் விதைபோன்ற இனப்பெருக்க உறுப்புக்களில் ஏற்பட்டால், மலட்டுத் தன்மையும் ஏற்படலாம்.

நாய், பூனை வளர்ப்போர் உரிய இடைவெளியில் அவற்றுக்குக் குடற்புழு நீக்க மருந்து கொடுக்கவேண்டும்.

## ஆழ் சுரங்கம் குடையும் புழு நோய் (VISCERAL LARVA MIGRANS OR TOXICARIASIS)

**TOXOCARA CANIS** என்னும் புழுவின் முட்டைகள் நாயின் மலத்திலும், **TOXOCARA CATI** என்ற புழுவின் முட்டைகள் பூனையின் மலத்திலும் காணப்படும். இவற்றின் முட்டைகள் உணவுடன் தொடுகையுற்றோ, வேறு வழிகளாலோ மனிதரின் வாய்மூலம் உட்கொள்ளப்பட்டால், முட்டைகள் குடம்பிகளாகி, உள் உறுப்புக்களை ஊடறுத்து ஊர்ந்து திரியும்.

அவற்றின் வாழ்க்கைவட்டம் மனிதரின் உடலில் பூரணப்படுத்த முடியாததாகும். இதனால், குழப்பமடைந்து கண்டபடி உடலினூடாகச் சுரங்கமறுத்து அங்குமிங்கும் திரியும். புழுக்கள் பல்வேறு முக்கிய அங்கங்களினூடாகவும் செல்லலாம் அல்லது அந்த அங்கங்களில் தங்கியும் விடலாம். அல்லது அங்கே இறந்துவிடலாம். கண்ணை ஊடறுத்துச் சென்று தொற்றை ஏற்படுத்தினால் அல்லது கண்ணில் தங்கினால் கண் குருடாகலாம். மூளையை ஊடறுத்துச் சென்று தொற்றை ஏற்படுத்தினால், வலிப்பு ஏற்படலாம்.

சூலகங்கள், பலோப்பியன் குழாய்கள் போன்றவற்றை ஊடறுத்துச் சேதப்படுத்தலாம். அல்லது தொற்றுக்களை ஏற்படுத்தலாம். பலோப்பியன்குழாய் பாதிக்கப்பட்டால் பலோப்பியன் குழாயில் கருவளர்தலும் நிகழலாம். கர்ப்பிணிகளின் கருப்பையிலுள்ள குழந்தையின் கண்ணை ஊடறுத்துச் சென்றால், பிள்ளை குருடாகப்பிறக்கலாம்.

கர்ப்பிணிகளுக்குக் கருச்சிதைவு ஏற்படலாம். எனவே, கர்ப்பிணிகள் நாய், பூனை வளர்ப்பதானால், அவற்றுக்கு உரிய இடைவெளியில் குடற்புழு நீக்க மருந்து கொடுப்பதில் தீவிர கவனம் செலுத்தவேண்டும். நாங்களை வீட்டினுள் நுழைய அனுமதிக்கக்கூடாது.

ச.ஆ.கோபாலமூர்த்தி

(தொடரும்.....)




ரேமினேற்றர் பட கதாநாயகனும், தற்போது தேர்தலில் போட்டியிட வுமுள்ள ஆர்னோல்ட் ஸ்வா செனிகரை வரவேற்கக் காத்திருக்கும் 3 வயது கலிபோர்னியச் சிறுமியொருத்தி.

### பாதுகாப்பு அமைச்சின் அறிக்கைக்கு எதிராக

# கொக்கோகோலா, பெப்சி நிறுவனங்கள் இந்திய உயர்நீதிமன்றில் வழக்கு தாக்கல்!




கொக்கோகோலா, பெப்சி ஆகிய மென்பானங்களில், நச்சுப்பொருட்கள் கொண்டுள்ளனதெனத் தெரிவித்து, அவற்றை விடுதிகளில் விற்பனை செய்வதைத் தடை செய்யவேண்டுமென, இந்தியப் பாதுகாப்பு அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

பெப்சி, கோக்கோகோலா ஆகிய மென்பானங்கள் அளவுக்கதிகமாக கிருமிநாசினிகள், பூச்சிநாசினிகளைக் கொண்டிருப்பதாக இந்தியச் சுற்றுச்சூழல் அவதானிகள் அறிவித்திருந்தனர்.சுகாதார அமைச்சு - இந்தப் பானங்களில் காணப்படும் நஞ்சை, பரிசோதனை மூலம் அறிய வேண்டும் எனவும் கேட்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து - கொக்கோகோலா, பெப்சி ஆகிய மென்பானங்கள் தொடர்பாக வெளியிட்ட அறிக்கைகளுக்கு எதிராக, உயர் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றை கோலா, பெப்சி நிறுவனங்கள் தாக்கல் செய்துள்ளன.

மனிதனுக்குத் தீங்கு தரக்கூடிய எவையும், தமது மென்பானங்களில் கலக்கப்படவில்லையென - மென்பான நிறுவன உயரதிகாரி டேவிட் கொக்ஷ் பி.பி.சிக்கு கூறினார்.


உலகவலம்

# பிரிட்டிஷ் படையினர் மீது ஆர்ப்பாட்டக்காரர் கல்வீச்சு!

ஈராக்கில் நிலவும் எரிபொருள் பற்றாக்குறையைக் கண்டித்து ஆர்பாட்டத்தில் ஈடுபட்ட ஈராக்கிய மக்கள், பிரிட்டிஷ் படையினர் மீது கற்களை வீசி, தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இதன்போது, ஆர்பாட்டக்காரர்கள், குவைத் எண்களைக் கொண்ட வாகனங்களைத் தாக்கியதோடு, தம்மைத் தாக்கமுயன்ற பிரிட்டிஷ் படையினர் மீது கற்களை வீசினர். இவர்களைக் கலைக்க பிரிட்டிஷ் படையினர் ஆகாயத்தை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர்.

# கனடா நாட்டு மாட்டிறைச்சிக்கு அமெரிக்கா பகுதியளவில் அனுமதி!



கனடாவிலிருந்து இறக்குமதியாகும் மாட்டிறைச்சிக்கு, விதித்திருந்த தடையை அமெரிக்கா பகுதியளவில் நீக்கியுள்ளது.

விசர் நோயைத் தோற்றுவிக்கும் கிருமிகள் (BSE), மாடுகளின் மூளையில் தொற்றியிருப்பது, இந்த வருட ஆரம்பத்தில், கனடாவில் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

ஒரு மாட்டில் மாத்திரம் இந்நோய் தொற்றியிருந்தது பரிசோதனையில் இருந்து தெரியவந்தது.

இதையடுத்து, அமெரிக்கா உட்பட 30 நாடுகள், கடந்த மே மாதம் முதல் கனடா நாட்டு மாட்டிறைச்சிக்குத் தடைவிதித்திருந்தன. இதனால், அந்நாட்டின் மாட்டிறைச்சித் தொழில் மிகவும் பாதிப்படைந்திருந்ததுடன், 750 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானத்தையும் இழக்கவேண்டி ஏற்பட்டது.

இப்போது - அமெரிக்கா விதித்திருந்த தடையை ஓரளவு நீக்கியுள்ளதை கனடா வரவேற்றுள்ளது.

# இந்தோனேஷியாவில் தாக்குதல் அபாயம்; எச்சரிக்கை விடுக்கின்றது அமெரிக்கா!

கடந்த செவ்வாய்க்கிழமை, இந்தோனேஷியாவில் ''மறியோஷ் உல்லாச விடுதிக்கு'' வெளியே நடைபெற்ற கார்க்குண்டு வெடிப்புத் தாக்குதல்போன்று, மேலும் பல தாக்குதல்களை, தீவிரவாதிகள் நடத்தலாம் என அமெரிக்கா எச்சரித்துள்ளது.

பாலித்தீவு குண்டுவெடிப்பிற்குக் காரணமாகவிருந்த "ஜெமா இஸ்லாமியா'' தீவிரவாதக் குழுவே, உல்லாசவிடுதிக் குண்டுவெடிப்புக்கும் பொறுப்பாகுமெனக் கூறப்படுகிறது.

ஆப்கானிஸ்தானின 'அல்-கொய்டா தீவிரவாதிகளுடன், இக்குண்டு வெடிபபில் ஈடுபட்டவர்களும் பயிற்சி பெற்றதாக, இந்தோனேஷியப் பாதுகாப்பு அமைச்சர் "மற்ரோறி அப்துல் டியாலிங்'' தெரிவித்திருக்கிறார்.


## தேவை

மரக்கன்றுகள் நாற்றுமேடையில் பதி வைத்து உண்டாக்கக்கூடியவர்கள் வேலைக்குத் தேவை.

**மில்க்வைற் தொழிலகம்**
525/2, கே.கே.எஸ் வீதி,
(சி-1302) யாழ்ப்பாணம்.

## சிறு விளம்பரம்

**தட்டச்சு வகுப்புக்கள்**

தமிழ், ஆங்கில புதிய வகுப்புக்கள் 11.08.2003 நாளை ஆரம்பமாகின்றன.

தொடர்பு:- 8/1, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (சி-1319)

**மணமகள் தேவை**

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த லண்டனில் பணிபுரியும் விசாக நட்சத்திர 1972 இல் பிறந்த லண்டன் பிரஜாவுரிமையுள்ள மணமகனுக்கு அழகிய 5 அடி உயரமுள்ள மணமகள் தேவை. சாதகக் குறிப்பு, புகைப்படம் மற்றும் விபரங்களுடன் நேரில் அல்லது தபால் மூலம் தொடர்புகொள்ளவும்.

ப.கிருஷ்ணமூர்த்தி,
தேவி அச்சக ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.T.P 2789 (448)

**நிறஞ்சனாஸ்** சங்கானை

சாருஹான், அஜித் நடித்த
**சாம்ராட் அசோகா**
(ஹிந்திப் படத்தின் தமிழாக்கம்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்
**RED SCORPION**
இரவுக் காட்சி. 8.45 (பு.நே)
(சி-1285)

**ராஜா** யாழ்ப்பாணம்.

14ம் திகதி வரை
மாதவன், ஜோதிகா, ஸ்ரீதேவி
நடித்த **A.V.M** இன



தினசரி 10.30, 2.30, 6.30
சனி, ஞாயிறு 9.30
ரிக்கெற் முற்பதிவு செய்து கொள்ளலாம்.
இயக்கம்: விக்ரமன்
(சி-1284)


### நிக்குவாரா நாட்டின்

# முன்னாள் ஜனாதிபதி பிரத்தியேக சிறையில்!

(மனகுவா)

நிக்குவாரா நாட்டின் முன்னாள் ஜனாதிபதி ஆர்னோல்டோ அலிமன், ஊழல் குற்றச்சாட்டுத் தொடர்பாக, பிரத்தியேக சிறையொன்றில் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஐம்பத்தேழு வயதுடைய இவர், சென்றவருட ஆரம்பத்தில் பதவியிலிருந்து விலகியிருந்தார். ஆனால், டிசம்பர் மாத்திலிருந்து தலைநகர் மனகுவாவிலுள்ள அவரது உல்லாச வாசஸ்தலத்தில் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

ஊழல் மற்றும் சட்டவிரோத பணப்பரிமாற்றங்கள் புரிந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டே இவர், வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

பதவிக் காலத்தில், தனது கட்சியின் தேவைககாக, பல மில்லியன் அரசாங்கப் பணத்தை இவர் கையாடல் செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

வீட்டுக்காவலிலுள்ள இவருக்கு காவலாளிகள் நாளாந்தம் கடமையாற்றிவருகின்றனர். அத்துடன் - பொலிஸாரும் இவரைக் கண்காணித்துவருகின்றனர். ஆனால், நிதிப் பற்றாக்குறை காரணமாக இவற்றைத் தொடர்ந்து செய்யமுடியாத நிலையிலுள்ள அந்நாட்டு அரசு , மறுசீரமைகப்பட்ட சிறையில் இவரை அடைத்து வைப்பதெனத் தீர்மானித்தது.

## நெஞ்சில் நீறுபூத்த நெருப்பு



நீறு பூத்தநெ ருப்பெங்கள் நெஞ்சிலே
நின்று வெந்திடக் கண்டிட லற்றவர்
கூறு வார்சமா தானம்வேண்டா மெனக்
குரைப்பர் பேரின நஞ்சினைக் கக்குவார்
ஆறு தல்உன்றன் ஆறு முகங்களால்
அடையும் என்பது திண்ணத்தில் திண்ணமே
ஏறு கைத்தவன் மைந்தனே! நல்லையில்
எங்க ளுக்கருள் ஈந்திடு வாய் ஐயா!

சொக்கன்

## நம்பி நல்லூரானை நாடு

தேரிலே ஊரவருந் தேவர்சிறை மீட்டவனை
நேரிலே பார்த்து நினைந்துருகிப் - பூரித்து
கும்பிட் டுருண்டு கூத்தாடிப் பாடியே
நம்பிநல் லூரானை நாடு.

தேர்வடத்தை நல்லூரிற் தொட்டபடி வீதியிலே
ஈர்க்கும் பணியை எதிர்பார்த்துக் - கார்க்கிறார்
வெய்யிலிலே வாடி வியர்த்துக் களைத்தாலும்
உய்வுதரும் தொண்டென் றுணர்ந்து.

தேர்தான் மனிதருடல் தெய்வன் அதனியக்கம்
தேர்குடையில் ஆன்மாவின் ஈடேற்றம் - நேர்த்தியாய்ப்
பேரின்ப வாழ்வு பெருகுவதை நல்லூரான்
தேரிலே ஊரத் தெளி.

சி.இராசரத்தினம்


## விழியின்மீது விழிப்பாயிருங்கள்

☆சிறிய எழுத்துக்கள் எழுதப்படிக்கச் சிரமப்படுகிறீர்களா?
☆ஒரு விதமான தலைவலியினால் அவதிப்படுகிறீர்களா?

**அப்படியாயின் நிச்சயம் கண்குறைபாடுதான் காரணம்.**

**எம்மிடம் வாருங்கள்.**

இலவசமாகக் கண்களைப் பரிசோதித்து,நவீன ரக பிரேம்களில் போட்டோகிறே, பிளாஸ்டிக் லென்ஸ் பெற்றுக்கொளளலாம். (பிளாஸ்டிக் லென்ஸ் விரும்பிய நிறங்களில் எம்மிடம் உண்டு.)

அத்துடன்

முகப்பொலிவிற்கேற்ப சங்குப் பற்களைக் கட்டிக் கொள்ளவும், மிதப்புப் பற்களுக்குக் கிளிப் போட்டுக்கொள்ளவும் நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

**எரிக்கணேஷ்**

மூக்குக்கண்ணாடியகமும், பல்கட்டுமிடமும்

564, 566 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
கிளை - 80, K.K.S வீதி, சுன்னாகம்.
T.P.2222486

91,K.K.S வீதி,
கொக்குவில்.

(சி-1331)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# இந்தியாவிலுள்ள அகதிகளை மீள அழைக்க அரசு முறையான திட்டம் வகுக்க வேண்டும்!

## யாழ். அரச அதிபர் பத்மநாதன் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இந்தியாவில அகதிகளாகத் தங்கியுள்ள இலங்கையர்களை, மீள அழைத்துக்கொள்வதற்கு முறையான திட்டங்களை - அரசாங்கம் வகுக்க வேண்டும் என்று - யாழ்.மாவட்ட அரச அதிபர் சி.பத்மநாதன் தெரிவித்தார்.

தற்போது ஏற்பட்டுள்ள சமாதானச் சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு, நாடு திரும்பும் இலங்கை அகதிகள், உயிராபத்து உட்பட பல சிரமங்களை எதிர்நோக்குவதாக அவர் குறிப்பிட்டார்.

தமிழகத்தில் இருந்து சட்ட விரோதமாக இலங்கைக்குத் திரும்பும் அகதிகள் - இந்தியப் படகோட்டிகளால், நெடுந்தீவில் தரையிறக்கி விடப்படுவதாகவும், யாழ். அரச அதிபர் பத்மநாதன் தெரிவித்தார்.

கடல் கொந்தளிப்பான நிலையில் சிறிய படகுகளில் நாடு திரும்பும் அகதிகள், கடலில் மூழ்கி உயிரிழக்கக் கூடிய அபாயம் காணப்படுவதனால், இந்திய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி, உரிய தீர்வு காணப்படவேண்டுமென்றும், அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பாகப் பிரதமரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டதாகவும், அரசஅதிபர் பத்மநாதன் மேலும் தெரிவித்தார்.

### சந்தேக நபர்கள் இருவர் கைது !

(கொழும்பு)

வெளிநாட்டவர்களை, இலங்கையூடாக சட்டவிரோதமாக இத்தாலிக்கு அனுப்பிவைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்ட பிரதான சந்தேக நபர்கள் இருவரை, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் நேற்றுக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரும்- இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் என, குற்றப் புலனாய்வுப் பொலிஸார் தெரிவித்தனர்.

### விபத்தில் இளைஞர் படுகாயம்!

(யாழ்ப்பாணம்)

இன்னொரு வாகனத்தைக் கடக்க முற்பட்ட வேளையில், பஸ் ஒன்று மோட்டார் சைக்கிளுடன் மோதியதால், மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தது, யாழ். போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு முன்பாக, நேற்று 12 மணியளவில் இடம்பெற்ற மேற்படி விபத்தில் - வசாவிளானைச் சொந்த இடமாகக் கொண்ட மோகன் என்றழைக்கப்படும் இளைஞரே படுகாயமடைந்தவராவர்.

### துணைப்படை...

தங்கியிருந்த இவர், தமது சொந்த ஊரான அக்கரைப்பற்றுக்கு சில நாட்களுக்கு முன் வந்திருந்தார் என்றும், நேற்றுமாலை தமது சொந்த அலுவல்களை முன்னிட்டு, சைக்கிளில் சென்றுகொண்டிருந்த சமயம், வீதியில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டதாகவும், அக்கரைப்பற்றுப் பொலிஸார் தெரிவித்தனர்.

34 வயதுடைய இவர் இரண்டு பிள்ளைகளின் தந்தையார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. தலையிலும், முதுகிலுமாக ஐந்து இடங்களில் சூட்டுக்காயங்கள் உள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (07)

### மூன்று நாள்...

திருகோணமலை - குரங்குப்பாஞ்சான் முகாம் தொடர்பாக, விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி, சுமுக நிலையை ஏற்படுத்துவதற்கான முயற்சியில் ஈடுபடவுள்ளார் என, நோர்வேத் தூதகரம் மேலும் அறிவித்துள்ளது.

### யாழ். இந்து...

கலைப்பிரிவில் - நிஷாந்தன் ஏ, 2பி, சந்திரதாசன், பெணான்டோ ஆகிய இருவரும் ஏ,பி,சி - ஏ,2சி ஒருவரும், ஏபிசி ஒருவரும், ஏபிசி மூன்று பேரும்

கணிதப்பிரிவில் - ஜெயந்தன் ஏ2 சி, டினேஸ்குமார் 2பி சி, ரகுரட்ணம் 2பி எஸ், நிமலன் பிசிஎஸ், சாரங்கன் 3சி பெற்றுள்ளனர்.

விஞ்ஞானப் பிரிவில் -வெங்டேசன் ஏபிசி, சாந்தீபன் 3பி, பவித்திரன் பி2சி, பிசிஎஸ் ஒன்றும், 2பிஎஸ் சித்தியை ஒருவரும் பெற்றுள்ளார்.

சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியில் கலைப்பிரிவில் சுகன்யா ஏ2பி மற்றும் பி 2சி நான்குபேரும், 2பிசி இரண்டு பேரும். வர்த்தகப்பிரிவில்- லக்சனா ஏ 2பி மற்றும் 3பி ஒருவரும், 2பி எஸ் இருவரும் சித்தி பெற்றனர்.

# தினகரன் முன்னாள் ஆசிரியர் சிவகுருநாதன் காலமானார்!

முதுபெரும் பத்திரிகையாளர் கலாசூரி இ.சிவகுருநாதன் நேற்று அதிகாலை காலமானார்.

கந்தர்மடத்தில் 1931.10.7 இல் பிறந்த இவர், ஆரம்பக் கல்வியை யாழ். இந்துக்கல்லூரி, யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி மற்றும் கொழும்பு சாகிரா கல்லூரியிலும் பெற்றார்.

பின்னர் - பேராதனை பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்ட அவர், யாழ். பல்கலைக் கழகத்தில் பத்திரிகைத்துறையில் முதுமாணிப்பட்டம் பெற்றவர்.

சட்டக்கல்லூரியில் கற்று சட்டத்தரணியான அவர் சட்டக்கல்லூரியின் பகுதி நேர விரிவுரையாளராகவும், திறந்த பல்கலைக்கழகம், கொழும்பு பல்கலைக்கழகம் ஆகியவற்றின் பத்திரிகைத்துறை டிப்ளோமா பயிற்சி நெறியின் விரிவுரையாளராகவும் கடமையாற்றினார். 1955 ஆம் ஆண்டு தினகரன் பத்திரிகையில் உதவி ஆசிரியராக சேர்ந்த அவர் தினமின பத்திரிகையிலும் சில காலம் பணியாற்றினார். 1957 ஆம் ஆண்டு தினகரன் செய்தி ஆசிரியராகவும், 1961ஆம் ஆண்டு தொடக்கம் 1994 ஆம் ஆண்டுவரை 33 ஆண்டுகள் பிரதம ஆசிரியராகவும் கடமையாற்றினார். இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவராக இருந்த அவர் பத்திரிகை பேரவையின் உறுப்பினராகவும் கடமையாற்றினார்.

தமிழ் பத்திரிகை உலகில் கலாசூரி இ.சிவகுருநாதன் இளந்தலைமுறையினருக்கு கலங்கரை விளக்கமாக திகழ்ந்தார். அன்னார் பத்திரிகைதுறையில் மட்டுமல்ல, இலக்கிய துறையிலும், சட்டத்துறையிலும் ஆளுமையை செலுத்தினார். அவரின் மறைவு தமிழ் ஊடகத்துறைக்கு பெரும் இழப்பாகும் என, கலாசூரி இ.சிவகுருநாதனின் மறைவையொட்டி இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் சார்பில் அதன் தலைவர் ஆர். துரைரத்தினம் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

### மதிலுடன் மோதி வான் விபத்து!

வவுனியாவிலிருந்து யாழ்.நோக்கி வந்துகொண்டிருந்த ஹையேஸ் வான், கச்சேரிக்கு முன்பாக விபத்துக்குள்ளாகியது. வானைச் செலுத்திவந்த சாரதி, தூக்க மயக்கத்திலிருந்த காரணத்தால்- வான் தனது கட்டுப்பாட்டை இழந்து, மதிலில் மோதியது. வான் பலத்த சேதத்துக்குள்ளாகியதுடன், அதில் பயணம் செய்த ஒருவர் படுகாயமடைந்து, யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.


# வவுனியா - தட்சனாமடுவில் இனந்தெரியாதவரின் சடலம்!

வவுனியா - தட்சணாமடுப் பகுதியில், குளத்தருகில் - 30 வயது மதிக்கத்தக்க ஒருவரின் சடலம், ஒரு கை இல்லாது, கருகிய நிலையில் பொலிஸாரால் கண்டெடுக்கப்பட்டு - வவுனியா பொது மருத்துவமனையில் மருத்துவப் பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சடலம், கிடந்த இடத்திலிருந்தது 200யார் தொலைவில் இறந்தவரின் இடது கை கிடந்தது. சடலத்தின் அருகே பெற்றோல் கொண்டு வந்ததாகக் கருதப்படும் பிளாஸ்ரிக் கானின் மூடியும் சிகரெட் லைற்றறும், 9 மி.மீ. வெற்றுத் துப்பாக்கி தோட்டா போன்ற தடயப் பொருட்களை பொலிஸார் கண்டெடுத்துள்ளனர்.

இந்த சடலம் தொடர்பான மருத்துவ அறிக்கை சமர்ப்பிக்குமாறு, வவுனியா நீதிவான் இளஞ்செழியன் வைத்தியசாலை சட்ட அதிகாரிக்கு பணித்துள்ளார். (க)





மட்டு.வாகரையில் இராணுவமுகாமின் கட்டளை அதிகாரி கருணாநாயக்க மீது நடத்தப்பட்ட கரும்புலித் தாக்குதலில் வீரச்சாவடைந்த மேஜர் ரட்ணாகரனின் 4ம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வு நேற்றையதினம் வாகரையில் இடம்பெற்ற போது - தேசியக் கொடியை விசாலகன் படையணித் தளபதி கே.சம்பந்தன் ஏற்றிவைப்பதை முதல் படத்திலும், கரும்புலி மேஜர் ரட்ணாகரனின் உருவப்படத்துக்கு அவரது தந்தையார் மலரஞ்சலி செலுத்துவதை இரண்டாவது படத்தில் காணலாம்.

# உப்போடை இராணுவ முகாமில் படையினரின் சோதனை தீவிரம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில்- ஏறாவூர் பற்று பிரதேசத்திலுள்ள வந்தாறுமூலை, உப்போடை வயல் பிரதேச படை முகாமில் சோதனை நடவடிக்கைகள் தற்போது அதிகரித்து வருகின்றது.


மேற்படி படைமுகாமினூடாக செல்லும் விவசாயப் பொதுமக்கள் தீவிரமான சோதனைக்கு உட்படுத்தப்படுவதுடன், தேசிய அடையாள அட்டையும் பதியப்பட்ட பின்பே செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

அரசாங்கத்திற்கும் - தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் மேற்படி படைமுகாம்களில் பொதுமக்கள் சோதனைக்கு உட்படுத்தப்படாத நிலையிலும், படையினர் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுவது குறித்து, பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பட்டிருப்பு பால சோதனைச் சாவடி, செங்கலடி கறுத்தப்பாலம், கிரான்குளச் சோதனைச்சாவடிகளைவிட, மேற்படி உப்போடை முகாமில் படையினர் இத்தகைய நடவடிக்கை மேற்கொள்வது குறித்து, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் தீவிர கவனம் செலுத்த வேண்டுமெனவும் இப்பகுதி பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

SCC
விஷேட கணனிப்பயிற்சி நெறிகள்
இந்தியா, மலேசியா, கனடா மற்றும் அமெரிக்கா எங்கும் வியாபித்திருக்கும் பெருந்தொகையான கணனிசார் வல்லுனர்களை உருவாக்கியதும், IBM மற்றும் Microsoft நிறுவனங்களின் ஆதரவைப் பெற்றுள்ளதுமான Aram Limited (இந்தியா) நிறுவனத்தினரும், SCS நிறுவனத்தினரும் இணைந்து இதுவரையில் யாழ் மாவட்டத்தில் அறிமுகப்படுத்தப்படாத பாடத் திட்டங்களுடன் தனது சேவையைத் தொடங்கியுள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.
DIPLOMA IN COMPUTER PROGRAMMING 12 Months
உலகத்தரம் வாய்ந்த நிறுவனங்களின் வேலை பெறுவதற்கான உயர் தரமான மென்பொருளை உருவாக்குவதற்கான பயிற்சி
DIPLOMA IN PROFESSIONAL MICROSOFT OFFICE XP 6-7 Months
DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING 4-5 Months
உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப் பெற, சுயதொழில் ஆரம்பிப்பதற்கு சகல கணனிகளையும் நீங்களே அமைத்துக் கொள்வதற்கான 100% பயிற்சி நெறி
- உத்தியோகத்தர்களுக்கான மாலை நேர வகுப்புக்கள்,
- விரிவுரைகள் யாவும் இந்தியாவிலிருந்து வருகை தந்த அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்களால் மேற்கொள்ளப்படும்
- கூடிய நேர செய்முறைப்பயிற்சி
- குறைந்த கட்டணம்
- இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொள்வதற்கான உதவிகள் வழங்கப்படும்.
- Online Classes
- பெண்களுக்கென தனிப் பிரிவுகள் (Hardware Courses)
பயிற்சி ஆரம்பம் 16.08.2003
Soft View Computer College
www.arammenporulagam.com
Arammenporulagam@eth.net
43, Arasady Road,
Thaddatheru Junction,
Jaffna, Sri Lanka.
T.P: 021 2225170

# மரண அறிவித்தல்



## M.T.திருநாவுக்கரசு

(பிரபல வர்த்தகரும்,முன்னாள்உரிமையாளர் இராஜேந்திரா ஸ்ரோர்ஸ் யாழ்ப்பாணம்)

**201, பிறவுண்வீதியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட M.T.திருநாவுக்கரசு, நேற்று (09-08-2003) சனிக்கிழமை மாலை 9.30 மணியளவில் காலமாகிவிட்டார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத் தரப்படும்.**

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

*தகவல்*
*T.இராஜேந்திரன் (மகன்)*
*(இராஜேந்திரா ஸ்ரோர்ஸ்)*
*(ஸ்ரீ ரங்கநாதன் றேடர்)*

201, பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம். (450)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 10.08.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.